உ

# அருள் ஒளி



12 FEB 2017
மாநகரசபை
யாழ்ப்பாணம்
PUBLIC LIBRARY
JAFFNA

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தென்திசை வாயில் கோபுரம் – கும்பாபிஷேகம்

## சிறப்பு மலர்

120


09-02-2017


தெல்லிப்பழை, இலங்கை 2017

# தென்திசை வாயில் கோபுரம் அடிக்கல் நாட்டு வைபவம்
# தைப்பூச நன்னாள் - 2016











# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
உதவி ஆசிரியர்
**திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்**

**தை மலர்**
**2017**

**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, இலங்கை.**

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

# தெற்கு வாயில் கோபுரம்

PUBLIC LIBRARY
JAFFNA

எங்கள் தேவஸ்தானத்தின் தென்திசை வாயில் கோபுரம் அழகாகக் காட்சி தருகிறன்றது. துர்க்காதேவியின் திருவருளாலும், அடியார்களின் பேருதவியாலும் 61 அடி உயரமான பஞ்சதள அமைப்பைக் கொண்ட கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு தைப்பூச நன்னாளில் கும்பாபிஷேகம் நிறைவேறுவது திருவருளே. 2016ம் ஆண்டு தைப்பூச நன்னாளில் வேத சிவாச்சாரியார்கள், துறவிகள், பக்தர்கள் நிறைவாகக் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினர். சரியாக ஒரு வருடம் இரவு பகலாக இத்திருப்பணி வேலை சிறப்பாக நடைபெற்றது. இந்தியா, சீர்காழி, பெரிய குத்தகைக்கரை சிற்பகலாவிநோதன் திரு.க. புருஷோத்தமன் குழுவினர் தேவஸ்தானத்தில் தங்கியிருந்து இத்திருப்பணி வேலைகளை நிறைவேற்றியுள்ளனர்.

துர்க்காதேவியின் தென்திசை வாயில் அற்புதம் நிறைந்தது. 1985இல் துப்பாக்கி முனையில் ஆலயத்தின் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் யாவும் நள்ளிரவு கொள்ளையடிக்கப்பட்டது. யாழ்ப்பாண மக்கள் முழுவதுமாக கலங்கினர். காவல் தெய்வத்தின் ஆபரணங்களை எடுத்தவர்கள் தப்பமுடியாது எனப் பலரும் கதறினர். சிவாச்சாரியர்கள் முதல் சிவத்தமிழ்ச்செல்வி அன்னை அவரை தங்கள் ஆபரணங்களையும் நீக்கி துர்க்கை அன்னையிடம் முறையிட்டனர். எங்கும் அடியார்கள் ஏங்கியழுதனர். என்ன அற்புதம். ஒரு வருடத்திற்குப் பின் தெற்குவாயில் முகப்பில் பெரிய

முடிச்சுக் காட்சியளித்தது. ஆச்சரியம் கொள்ளையடிக்கப்பட்ட அத்தனை ஆபரணங்களும் தென்திசை வாயிலில் போடப்பட்ட முடிச்சில் கிடந்தது. அடியார்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். அம்பாளின் பேரற்புதம் இன்று வரை உலகளாவிய ரீதியில் பேசப்பட்ட வண்ணமாக உள்ளது. முடிச்சுக் கிடந்த இடத்தில் செங்கழுநீர்த் தடாகம் அமைத்துப் பேணவேண்டுமென தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத்தினர் முன்வந்தனர். புனிதம் பெற்ற தெற்கு வாசலின் மேன்மையை மேலும் சிறப்பிக்கும் வண்ணம் தற்போது அழகான கோபுரம் எழுந்திருப்பது அம்பாளின் மகத்துவமே. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில் போல் தெல்லிநகர் துர்க்கையம்பாள் ஆலயம் விரைவில் எல்லாத் திசையும் கோபுரக் காட்சி தருவாள் என்பது அடியார்களின் நம்பிக்கை. தேவஸ்தானம் பல சமூகப்பணிகளை ஆற்றிவரும் வேளை இத்திருப்பணியையும் முன்னெடுத்து வெற்றிகண்டுள்ளது. மனிதர்களுக்கு அப்பால் மகத்துவம் மிக்க துர்க்கை யாவற்றையும் ஆற்றுப்படுத்துகிறாள். இதுவன்றி வேறொன்றுமில்லை.

- ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

உ

சிவமயம்

### கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீன கர்த்தா

# இராஜ ராஜஸ்ரீ கு. நகுலேஸ்வர சிவாச்சாரியார்

## வழங்கிய

# ஆசிச்செய்தி

பஞ்ச ஈஸ்வர தலங்களில் தலையாய கீரிமலை நகுலாம்பாள் சமேத நகுலேஸ்வரப் பெருமானின் பெருங்கருணையைப் போற்றி வணங்குகிறேன்.

எமது தேவஸ்தானத்துடனும் மாவை ஆதினத்துடனும் மிகவும் தொடர்புடைய திருக்கோவில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் என்பது சகலரும் அறிந்ததே. அம்பாளின் அருளால் தெற்கு வாசலில் கோபுரம் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறவது மிகவும் சந்தோஷமான விடயமாகும். சென்ற ஆண்டு தைப்பூச நாளில் யானும் அடிக்கல் நாட்டும் வழிபாட்டில் கலந்துகொண்டு ஆசி வழங்கினேன். மிக ஆனந்தம், குறிப்பிட்ட காலப்பகுதியில் நேர்த்தியாக இத்திருப்பணி நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது சக்தியின் கடாட்சமே. ஆலய நிர்வாக சபையினரின் நன்முயற்சியை வாழ்த்தி எமது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இராஜ ராஜஸ்ரீ கு. நகுலேஸ்வர சிவாச்சாரியார்**
*நகுலேஸ்வர ஆதீனம்,*
*கீரிமலை.*

உ
குகமயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தா வழங்கிய ஆசியுரை

# அன்னையின் கோபுர எழில் காண்பீர்

தெல்லிப்பழை துர்க்காபுரம் உழுகொடைப் பதியினிலே கோவில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருககும் அன்னை துர்க்காதேவி அம்மன் ஆலய தெற்கு வாசல் கோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வதையிட்டு மாவை ஆதீனப் பேரரசு ஆதீன கர்த்தாக்கள் மகிழ்வு கொண்டு கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல மாவைக் கந்தப்பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆதீன கர்த்தாக்களின் ஆசீர்வாதங்கள்*

*மாவை ஆதீனம்*
**மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்**
*ஆதீனகர்த்தா*

உ

அம்பாள் துணை

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

**பிரதமகுரு**
**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்**
**வழங்கிய**

# ஆசியுரை

அம்பாளின் பேரருளால் எழுந்த தென்திசைக் கோபுரத்தின் அழகு வர்ணிக்க முடியாதது. அற்புதம் நிறைந்த துர்க்காதேவியின் திருவருளால் ஆண்டு தோறும் புதிய திருப்பணிகள் நடைபெற்று ஆலயம் புதுப்பொலிவு பெற்றவண்ணமாகவுள்ளது. தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு எவ்வித குறையுமேற்படாது காப்பவள் துர்க்கையம்பாள். ஆதலால் அம்பாளின் திருப்பணி வேலைகள் எதனை ஆரம்பித்தாலும் அடியவர்கள் முன்வந்து தம்பங்களிப்பினை வழங்குவதைக் காணலாம். எங்கள் தேவஸ்தானத்தின் தலைவரது பேராவலின் விளைவாக தென்திசையில் இக்கோபுரம் எழுந்து நனவாகியது. மேலும் வடக்குத் திசையிலும் எதிர்காலத்தில் கோபுரம் அமையவேண்டுமென்பது எமது பேராவல். அம்பாளின் அற்புத சக்தியால் யாவும் நல்லவண்ணம் நடைபெறும் என்பது உறுதி. தர்மகர்த்தாக்கள், நிர்வாக சபையினர் நல்ல திட்டங்களை உருவாக்கி ஆலயத்தை வளப்படுத்தி வருகிறார்கள். அம்பாளின் தென்திசை வாயில் கோபுரக் கும்பாபிஷேகம் சிறக்க துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அனைவருக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்**
*பிரதமகுரு*

உ

ஸ்ரீராம ஜெயம்

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

## ஆதீனகர்த்தா வழங்கிய ஆசியுரை

இந்தப் பிரபஞ்சத்தில் பூமி என்ற உலகத்தை மேலானதாகக் கூறுகிறார்கள் தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், கிம்புருஷர்கள், மானிடர்கள் எல்லோரும் இங்கு வந்து தவமியற்றி இறையருளைப் பெற்று பேரின்ப வாழ்வைப் பெறுகிறார்கள். இந்தப் பூலோகத்தில் சொர்ண தீவு என்று சொல்லப்படும் இலங்கைத் தீவின் முத்து என்று அழைக்கப்படும் யாழ் கற்பகத்தின் புண்ணியபதியாக அமைந்த தெல்லிப்பழையின் துர்க்காபுரம் என்கின்ற பாகத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி மக்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கின்ற உமாதேவியின் ஒரு மூர்த்தம் துர்க்கை அம்பாள் ஆகும். ஆகவே குறிப்பாக சிவாலயங்களில் சண்டேஸ்வரருக்கு அண்மித்துள்ள இடப்பாக மாடத்திலே நாம் துர்க்காதேவியை சிவதுர்க்காதேவியாக வழிபடுகிறோம். ஆனால் இங்கே மூலமூர்த்தியாக சங்கு சக்கர அபய கபாலத்தோடு கூடிய மகிடன் தலை மேல் ஏறி நின்று அருள்புரிகின்ற விஷ்ணு துர்க்கையாக வரும் அடியார்கள் அனைவருக்கும் அருளை அள்ளி வழங்குகின்றாள். இந்த அம்பிகையின் ஆலயத்தில் தெற்குப் புறமாக அமைந்த கோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வு அடைகிறோம். இந்த புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்ட அம்பிகையின் தர்மகர்த்தா சபை, நிர்வாகசபை, சிவாச்சார்யப் பெருமக்கள் அனைவருக்கும் எமது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக தெற்கு வாசலிலே இந்தக் கோபுரத்தை அமைக்கவேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றியிருக்கின்ற நிர்வாகசபைத் தலைவராக விளங்குகின்ற கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களை பாராட்டி அவர்களின் பணி மென்மேலும் சிறக்க அன்னையாம் துர்க்கையின் பாதம் பணிந்து எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*"லோகா சுகினோ பவந்து"*

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**

*ஆதீனகர்த்தா*

# தென்திசை கோபுரம் கும்பாபிஷேகம்
# கவிதை மழை

**கண்களி கூரும் இனிய நாள்!**

வெண்மணல் படுத்த வீதிகள் சூழும்
கோயிலின் தென்திசை மருங்கு
விண்தொட நிமிர்ந்தோர் கோபுரம் நிற்கக்
கண்டுமெய் சிலிர்த்திடும்; அடியார்
கண்களி கூரும் இனியநாள் கலசம்
புனித நீராட்டு நன்னாளாம்!
பண்களி கூரப் பரைபுகழ் பாடி
ஆடுவம் பக்தர்காள் வம்மின்!

துர்க்கையின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்த
துரந்தரி வழியினில் தொடர்ந்து
நற்பணி யாற்றும் திருமுரு கப்போர்
நாவலன் முயற்சியால் பண்டை
சிற்ப நூல் தேர்ந்த வல்லுநன் **புருஷோத்**
**தமன்**தன தணியொடும் படைத்த
அற்புதம் பஞ்ச தளத்தொடும் எம்மை
ஆட்கொள வந்தது, தொழுமின்!

'போர்இடப் பெயர்ச்சி, இழப்பு என அலைந்தோர்
புகலிடம் துர்கைதன் கோயில்'
ஊர் உலகறிந்த உண்மையீது, இந்து
மதநிறு வனங்களுள் உயர்ந்து
யாருமே போற்றும் பணிகள் முன்னெடுக்கும்
அறப்பெரும் நிலையமாய் ஓங்கி
வேரென – சைவர் கலங்கரை விளக்காய்
மிளிருக வையகம் வாழ!

**கவிஞர் சோ. பத்மநாதன்**

# தென்–பொன் வாசற் கோபுரம்

தெல்லியூர் உறையும் துர்க்கா
தேவியார்... ஆட்சி செய்து
தொல்லறம் காக்கும் கோவில்....
துயர்களைத் துரத்தும் தீ... வில்!
எல்லையில் எழில்கள் பூண்டு
இரண்டாம் பொற் கிரீடம் சூடிக்
கொள்வதாய்த் தெற்கு வாசற்
கோபுரம் படைத்த தின்றில்!

அன்று ஓர் காலம்.... இந்த
ஆலயப் பொன்னை எல்லாம்
கொண்டதோர் கூட்டம்; யுத்த
கோரத்தால் விளைந்த சோகம்!
"என்தான் புதுமை" என்றெம்
அன்னையை வியக்க... யாவும்
வந்தன மீண்டும்... இத்.... தென்
வாசலில்.... மகிமை பாரும்!

சென்ற தைப்பூச நாளில்...
திருவருள் கூட... நாட்டிக்
கொண்டனர் அடிக்கல்! ஆண்டுள்
கோபுரம் வியப்பாய்க் கட்டி
இன்று தைப்பூசத் தன்று
எழுப்பினர்! தளங்கள் ஐந்து
நின்றதைம் பூதம் போல...
'அறுபத்தோர்' அடிக ளாக...

காரணப் பெயரால்.... தெற்கு
வாசலின் அரணாய்.... காவற்
கூண்டுமாய்... தென்–பொன் வாசல்
கோபுரம் நிமிர்ந்த வேளை,
கூடி ஊர் குவிந்துயிர்த்துக்
கும்பாபி ஷேகம் காண
வாழ்த்தினோம்... சிற்பி மாரை!
வணங்கினோம்... பணி செய்தோரை.

**கவிஞர் த. ஜெயசீலன்**

# குடமுழுக்கினால் உலகம் உய்யுமே!

1. தெல்லிப்பழைத் துர்க்கா தேவியின் திருக்கோயில்
தென்றிசைக் கோபுரக் குடமுழுக்கு
தொல்புகழ் ஆண்டெனத் தோற்றி துர்முகி
தூயதைத் திங்களின் தைப்பூசம்
புல்லிய வளர்பிறை புலர்காலைப் பொழுதினில்
புண்ணிய காரியம் பொலிவுற
நல்லிசை வாத்தியம் நாண்மறை முழங்கிட
நடைபெறத் திருவருள் நாடிற்றே!

2. தாயின் மடியினில் தழைத்திடு மழலைபோல்
தண்ணொளி வெண்ணிலா தருவபோல்
பாயும் அருவியின் பயன்விளை கின்றபோல்
பங்கய மென்மலர்ப் பான்மைபோல்
ஓய்விலா துழைத்திடும் உழவரின் உறுதிபோல்
ஒண்டமிழ் மொழியதன் உயர்வுபோல்
ஆயபே ரன்புசெய் அன்னையின் கோபுர
ஆகமகும் பாபிஷேகம் அமையுமே!

3. சின்னதாய் அமைந்து, சீரினாற் பொலிந்து
சிலபத்து ஆண்டின்பின் உயர்ந்து,
அன்னையார் தங்கம்மா அவர்தம் தலைமையில்
ஆலய அறங்காவல் சபையினர்
முன்னுயர் பணிகளால் மூச்சுடன் எழுந்து
மூலக் கோபுரம், மண்டபம்
இன்னறுந் தீர்த்தக் கேணியும் இயற்றி
இறைவியெம் துர்க்கா இருந்தனள்.

4. ஆதர வற்ற பெண்களின் நலனுக்
கானதோர் மகளிர் இல்லம்
தீதிலா அறிவைத் திரட்டியே நல்கத்
திகழ்ந்தது நூலக மொன்று
வாதனை செய்யும் வருத்தங்கள் போக்க
வந்தது ஔடத சாலை
சாதனை படைத்த சரித்திரம் துர்க்கா
சக்தியின் சந்நிதி யன்றோ!

5. துர்க்கை யம்மனைத் தொழுபவர் பசியால்
துவண்டிடக் கூடாதெனக் கருதி
அர்த்த மோடன்ன தான மண்டபம்
அமைத்தே அருஞ்செய லாற்றி
நர்த்தன மாடிடும் நளின சிங்கார
நாயகி ஆலயந் தன்னில்
மார்த்தன மிடுவாள் மலரடி பணிய
மலர்ந்தது மணிமண் டபமாம்

6. தெல்லியூர் நாடியே தெரிசனம் பெற்றிடத்
திசையெங்கு மிருந்து வருவார்
வல்வினை பொடிபட வரம்வேண்டித் துர்க்கையை
வாயாரப் பாடி மகிழ்வார்
அல்லதை ஆற்றிடும் அழுக்குறு மனத்தினில்
அமைதியை அன்பினை அருளப்
பல்வித மாகவே பரவியே தேவியைப்
பார்த்ததும் கண்ணீர் சொரிவார்.

7. இதுபோல ஒருதலம் ஈழத்தில் இலையென
இதயத்தாற் பேசும் மாந்தர்,
அதுபோல ஆயிரம் அறப்பணி ஆற்றிடும்
ஆயலம் உளதோவெனக் கேட்பர்
மதுவுண்ட வண்டாகி மகோற்சவ காலத்தில்
மண்ணுளோர் அன்னையைக் கண்டு
எதுவந்த போதிலும் எழில்துர்க்கை யிருக்கின்றாள்
எமக்கேது இனித்துயரம் என்பார்.

8. ஆறுகாலப் பூசையும் ஆன்மீக சேவையும்
அறப்பணி ஆற்றிடும் நன்மையும்
மாறுபடா மனத்தராய் மக்கள்வந் திறைஞ்சிடும்
மாட்சியும் துர்க்கையின் ஆட்சியும்
ஈறிலாப் பெருமாட்டி எங்கள்சிவத் தமிழ்ச்செல்வி
இணையற்ற அருட்பணியின் ஈகையும்
பேறினாலவர் பின்வந்த பெருந்தலைவர் திருமுருகன்
பேணுகின்ற பெருந்தவமும் பெருகவே

9. விரைகமழ் மலர்கள் விரவிய சூழல்
விண்ணுற வோங்கிய தருக்கள்
தரையெலாம் வெண்மணல் தடவிய கோலம்
தாவிடும் நாதஸ்வர கானம்
நிரைநிரை யாய்வரும் அடியவர் நேர்த்தி
நின்றொளிர் கோபுரக் கீர்த்தி
உரையுணர் விறந்து அன்பர் அன்னையை
உள்ளத்தால் வணங்குவர் உண்மையாய்.


10. உலகெங்கும் உன்னதச் சைவர்கள்
உவந்தநல் லுதவிக ளோடு
நிலைபெற்ற துர்க்கையின் நீடிய பணியொன்று
நிறைவேற அன்னையருள் புரிந்தனள்
கலைநின்ற பஞ்சதளக் கவினுறு கோபுரம்
காலத்தைக் கடந்து நிற்கவே
சிவபாத முயற்சியால் செய்தே முடித்தனர்
செஞ்சொற் செல்வரின் தலைமையில்


11. கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
கொண்டவூ ரென்றும் வாழும்
மூபுர மெரித்த முன்னோன் தேவி
மூல மூர்த்தமாய் ஆனகோயில்
மாபுரம் துர்க்கா வெனமாறிய மண்ணில்
மகா கும்பா பிஷேகம்
சீபுரத் தென்றிசைக் கோபுரம் காணவே
சிந்தை குளிர்ந்து சிறக்குமே!


12. அந்தணர் அருமறை மந்திரம் ஓதிட
ஆலய மணிகள் ஓசையிட
சிந்தைகொள் திருமுறைப் பனுவல்கள் ஒலித்திடச்
சீருடன் வாத்தியம் முழங்கிட
வந்தனை செய்து வாழ்த்திடு மடியார்
வாயினு மனத்தினும் பக்தி
முந்துறத் துர்க்கை தென்கோ புரக்குட
முழுக்கினா லுலகம் உய்யுமே!


**கவிஞர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு**


## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
## தென்திசை வாயில் கோபுரத்தில் இடம்பெற்றுள்ள சிற்பங்கள்




























# இராஜகோபுரம்

சிவத்தமிழ்ச் சொல்லழகர்
திரு.ச. லலீசன் அவர்கள்
(கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

இயற்கை முழுவதிலும் அழகுண்டு. சில இடங்களில் அமைந்துள்ள அழகு நமது எண்ணங்களை கொள்கை கொண்டு விடுகின்றது. மனத்தகத்து மேலான சிந்தனைகளைத் தூண்டுவதற்கு இவ்வழகு வழிகோலுகின்றது. இயற்கையின் சக்தி குறித்துப் புரிந்துகொண்ட நம்முன்னோர் வேதகாலந் தொட்டு இயற்கைக்கு முதன்மை கொடுத்து வழிபாடாற்றத் தலைப்பட்டனர். நதிக்கரைகளிலும் மர நிழல்களிலும் ஆரம்பித்த வழிபாட்டிடங்கள் ஆகமங்களை அனுசரித்து ஆலயங்களாகப் புதுக்கப்பெற்றன.

ஆலயமொன்று உடல் என்னும் ஆலயத்தின் புறச்சின்னமாகும். புறச்சின்னத்தை நம் மனம் போன போக்கில் அமைத்துவிடமுடியாது. மூல அமைப்பு ஆகிய சரீரத்திற்கும் அதன் குறியீடாக விளங்குகின்ற ஆலயத்திற்கும் இயைபு இருத்தல் வேண்டும். இதனாலலேயே ஆலயங்களைக் கட்டுவதற்கு ஆகம காரர் விதிமுறைகளை வகுத்தனர். தேசப்படத்தின் துணைகொண்டு தேசத்தை நன்கு அறிந்துகொள்வது போல கட்டப்பெற்றுள்ள ஆலயமொன்றின் துணைக்கொண்டு சரீரம் என்னும் ஆலயத்தின் தத்துவங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற கோலத்தில் ஆலயம் அமைந்துள்ளது. மூலஸ்தானம் அல்லது கருவறை மனிதனின் சிரசையும், அர்த்த மண்டபம் கழுத்தினையும், மகா மண்டபம் மார்பினையும் தரிசன மண்டபம் வயிற்றினையும் அடுத்துள்ள மண்டபங்கள் கால்களையும் இராஜகோபுரம் பாதங்களையும் கோபுர ஸ்தூபி பாதத்தின் விரல்களையும் குறிப்பதாகக் கொள்வர். வழிபட நாடிவரும் அடியவர் கோவிலின் வனப்பையும் கம்பீரத்தையும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் இராசகோபுரமே வெளிப்பட்டுத் தெரிகின்றது. நெடுந்தூரத்திற்கு அப்பால் உள்ளவர்களுக்கும் தெய்வ சொரூபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி காட்சி தருவதால் தூல லிங்கமெனக் கோபுரத்தை அழைப்பர்.

இயற்கை எழில் கொஞ்சம் மருதநிலச் சூழலும் அழகான நந்திக் கடற் சூழலும் ஆலயத்திற்கு மெருகூட்ட நந்திக்கடலை நோக்கிய வண்ணம் வற்றாப்பளை அம்பாளின் இராஜகோபுரம் வானளந்து எழுந்து நிற்கின்றது. திருக்கோவிற் கோபுரத்தைச் சூழவந்து வணங்காத கால்களால் பயனென்ன? எனக் கேட்கிறார் நாவுக்கரசர்.

"கால்களாற் பயனென் – கறைக் கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்?"

என்பது திருஅங்கமாலையில் இடம்பெறும் பாடல்.

கோபுரமானது கீழ்ப்பகுதியில் அகன்றும் மேல்நோக்கிச் செல்லச்செல்லக் குவிவாக ஒடுங்கியும் காணப்படும். இந்த அமைப்பானது இடரில் சிக்கிய ஆன்மா இறைவன்பால்

சிந்தையை ஒருமைப்படுத்தினால் ஈடேறமுடியும் என்பதன் குறியீடெனக் கொள்ளலாம். மனித எண்ணங்களை ஒருநிலைப்படுத்துவதன் அவசியத்தையும் கோபுரம் நினைவூட்டுகின்றது.

## கோபுரம் – தோற்றமும் வளர்ச்சியும்

கோபுரம் என்ற சொல் வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்த சொல்லென அறிஞர்கள் கருதுகின்றனர். சங்க இலக்கியங்களிலோ அல்லது அதற்குச் சற்றுப் பிற்பட்ட சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலோ கோபுரம் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. ஆயினும் வடமொழியில் எழுந்த மகாபாரதம் முதலிய நூல்களில் கோபுரம் என்ற சொற்கையாட்சி இடம்பெற்றிருக்கிறது. வேதகாலத்தில் பசுக்களே மேலான செல்வம். இவற்றை மூங்கிலால் வேலியிட்டு அடைத்து வைத்தனர். மூங்கிலால் ஒரு வாயிலும் அமைத்தனர். இதனையே கோபுரம் எனக் குறித்தனர் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கோ என்பது பசுவையும் புரம் என்பது காத்தலையும் குறிப்பதால் இக்கருத்து ஏற்பட்டிருக்கவேண்டும்.

எல்லையிடப்பட்ட அமைப்பு ஒன்றின் வாயிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் மிக நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. கி.மு. 1500ஆம் ஆண்டிற்கு முன்னரேயே பண்டைய எகிப்தில் வாயிற்கட்டிட அமைப்புக்களுடன் கூடிய கோவில்கள் இருந்துள்ளன. இந்துக் கோவில் கோபுர வரலாற்றில் கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கும் பின்னரே கோபுரம் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது எனக் கருதுவர். ஆயினும் வேதகால ஊர்களில் கோபுரங்களின் கருத்துருவிற்கான ஆதாரம் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆந்திராவில் அமராவதி, நாகார்ச்சுனகொண்டா முதலிய இடங்களில் கிடைத்த சிற்பத் தொகுதிகளில் கோபுர அமைப்புக் காணப்படுவதாக வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. எனவே கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே தென்னிந்தியர்கள் கோபுரம் பற்றிய அறிவைப் பெற்றிருந்தனரென உணரமுடியும். இயற்கைப் பொருள்களினால் நிறுவப்பட்ட வாயிற் கட்டிட அமைப்புக்கள் காலப்போக்கில் நின்று நீடித்து உழைக்கும் கட்டிடப்பொருட்களால் ஆக்கப்பட்டிருக்கலாம். இப்படி அமைக்கப்பட்ட விசேட வாயில் தோரண வாயிலென அழைக்கப்பட்டது. பௌத்த ஆலயங்களில் தோரண வாயில் அமைக்கும் வழக்கம் நீண்ட காலமாகக் காணப்படுகின்றது.

தமிழகத்தின் கோபுரங்களில் மிகவும் தொன்மையானது காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் உள்ள கோபுரமாகும். இது பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோபுரமாகும். அக்காலத்தில் கோபுரம் ஒரு முதன்மைக் கூறாக அமையாமையால் ஒப்பீட்டளவில் சிறிய பருமனுடையதாகவே இக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. பல்லவர், சோழர் காலங்களில் கோபுரங்களின் மீது அதிக கவனம் செலுத்தப்படவில்லை. கோவில்களில் கருவறைக்கு மேல் அமைக்கப்படும் கட்டிடப்பகுதியை விமானமென அழைப்பர். பல்லவர், சோழர் காலங்களில் கோபுரத்தைவிட விமானத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். கோவில் கட்டிடக்கலை

மிகச்சிறப்பான வளர்ச்சியைப் பெற்ற சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட மிகப்பிரதான ஆலயங்களான தஞ்சை, திரிபுவனம், கங்கைகொண்ட சோழபுரம் முதலிய இடங்களில் கர்ப்பக்கிரகத்தின் மீதுள்ள விமானம் அவ்வக்கோவில்களில் கோபுரங்களைக் காட்டிலும் உயரமாக அமைந்திருக்கிறது. இறைவன் வீற்றிருக்கும் கருவறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முகமாக விமானத்தைப் பெரிதாக அமைக்கும் வழக்கம் அக்காலத்தில் காணப்பட்டது.

கோவில்களில் கோபுரம் அமைக்கப்பட்ட வரலாற்றைக் குறிப்பிடும் பேர்சி பிறவுண் கோவில்களின் புனிதத்தன்மை காரணமாக அதன் கருவறையை இடித்துப் பெரிதாக்க விரும்பாத இந்துக்கள், காலமாற்றத்திற்கு ஏற்ப கோவிலை விஸ்தரிக்கும் நிலையில் கருவறையில் மாற்றத்தைச் செய்யாது அதனை அண்டி வேறு அமைப்புக்களை உருவாக்கினர் என்கிறார். கோவிலின் முக்கியத்துவம் காரணமாகக் கோவிலைச் சூழ பெரிய மதிற்சுவர்களை எழுப்பிய இந்துக்கள் அதன் வாயில்களில் விமானத்தை விட மிக உயரமாகக் கோபுரத்தை அமைத்தனர் என மேலும் குறிப்பிடுகின்றனர். கோபுரங்களின் உயரம் வளர்வது கோயிலின் பெருமையை உயர்த்தியது மட்டுமன்றி அதனைக் கட்டுவித்தவரது அதிகார பலத்திற்கும் சாட்சியாக அமைந்தது.

சோழர் காலத்தில் ஆலயங்களில் பல கோபுரங்கள் அமைக்கப்படும் மரபு தோற்றம் பெற்றது. தஞ்சைப் பெரிய கோவிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. இவை விமானத்தை விட சிறியவையாக இருப்பதால் அதிக கவனத்தைப் பெறுவதில்லை. விஜயநகர நாயக்கர் காலமே கோபுர காலமெனப் போற்றப்படத்தக்க காலமாகும். இவர்களது காலத்தில் ஒப்பீட்டளவில் விமானம் சிறிதாகவும் கோபுரம் பெரிதாகவும் அமைக்கப்பட்டன. திருவண்ணாமலை, திருவில்லிபுத்தூர், மதுரை, திருவரங்கம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட உயர்ந்த கோபுரங்கள் இன்றும் அழகாகக் காட்சி தருகின்றன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் 180 அடி உயரத்திற்கு மேல் கோபுரங்கள் அமைக்கப்பட்டன.

இந்துக் கோவில்களில் மிக உயரமான கோபுரம் என்ற பெருமைக்குரியது திருவரங்கக் கோபுரம் (ஸ்ரீரங்கம் ஸ்ரீரெங்கநாத கோவில்) ஆகும். இது 17ஆம் நூற்றாண்டிற்குரியதாயினும் 1687ஆம் ஆண்டிலேயே இக்கோபுரத்தை முழுமையாகக் கட்டிமுடித்தனர். 13 தளங்களையுடைய இக்கோபுரத்தின் உயரம் 236 அடியாகும். திருவண்ணாமலைக் கோபுரம் 217 அடி உயரத்தையும், திருவில்லிப்புத்தூர் கோபுரம் 192 அடி உயரத்தையுமுடையவை. திருவில்லிபுத்தூர் கோபுரம் தமிழக அரசின் சின்னமாகவும் அமைந்திருக்கிறது.

## இலங்கையின் உயரமான இந்துக் கோவிற் கோபுரங்கள்

இலங்கையில் உடப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீருக்குமணி சத்தியபாமா சமேத பார்த்தசாரதி (திரௌபதை அம்மன்) ஆலயக் கோபுரம் அண்மையில் (2011 தை) அமைக்கப்பட்டதாகும். இது 108 அடி உயரமானது. 9 தளங்களையுடையது. 8 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இக்கோபுரத்தை அமைப்பதற்கு 5 ஆண்டுகள் எடுத்தது.

இதேபோல மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயக் கோபுரமும் 85 அடி உயரமானதாகும். இங்கும் 9 தளங்கள் உள்ளன. இவ்விரு கோபுரங்களுமே இலங்கையில் உள்ள உயரமான இந்துக் கோவில் கோபுரங்களாகும். இந்த வரிசையில் வற்றாப்பளை அம்மன் ஆலயக் கோபுரம் 5 தளங்களைக் கொண்டு 60 அடி உயரமுடையதாக விளங்குகின்றது.

## கோபுர அமைப்பும் வற்றாப்பளைக் கண்ணகியின் கோபுரமும்

திருக்கோவிற் கோபுரங்கள் பற்றி காசியப சிற்ப சாஸ்திரம் மயமதம், மானசாரம் என்னும் சிற்ப சாத்திர நூல்களும் காமிகம், காரணம், சுப்ரவேதம் ஆகிய ஆகமங்களும் எடுத்து விளக்குகின்றன. மானசாரம் என்ற சிற்ப நூல் ஐவகைப் பிரகாரங்களில் (வீதி) கோவிலுக்கு முற்பகுதியில் கோபுரம் அமைதல் வேண்டுமெனக் கூறி இவற்றைப் பற்றித் தனித்தனியே குறிப்பிடுகின்றது. அந்தர் மண்டபத்திற்கு அணித்தான கோபுரம் துவாரசோபை என்று பெயர்பெறும். இதையடுத்திருக்கும் கோபுரம் துவாரசாலை எனப்படும். மூன்றாவது கோபுரம் துவாரப் பிரசாதம் எனவும் நான்காம் ஐந்தாம் கோபுரங்கள் முறையே துவாரஹர்மயம், மஹாமர்யாதை எனவும் பெயர் பெறும். இவ்வைந்தாவது கோபுரத்திற்கு மகா கோபுரம், இராஜகோபுரம் என்ற பெயர்களும் உண்டு. எமது பிரதேச ஆலயங்களில் பெரும்பாலும் இரண்டு பிரகாரங்களே காணப்படுகின்றன. இதனால் இங்கு அமைக்கப்படுகின்ற ஒரு கோபுரத்தை இராஜகோபுரம் என அழைக்கும் வழக்கத்தை நாம் கொண்டிருக்கிறோம்.

கோபுர அமைப்பில் நிலமட்டத்திலிருந்து அமையும் முதலாவது அமைப்பை வியாழ மட்டம் என்பர். இவ்வியாழ மட்டத்திற்கு மேல் ஒன்றன் மேல் ஒன்றாக பிரமான அடிப்படையில் அமைவது தளங்களாகும். இராஜகோபுரத்தின் தளங்கள் ஒற்றைப்படை எண்ணிக்கையில் அமைந்திருக்கும். அவ்வெண்ணிக்கையில் உச்சியில் கலசங்களும் அமைந்திருக்கும்.

கோபுரமொன்றின் ஒவ்வொரு வாயிலின்இரு மருங்கிலும் காவற்தெய்வங்கள் அமைக்கப்படவேண்டுமென்பது விதியாகும். அதாவது ஆண் தெய்வத்திற்குரிய கோபுரமாக இருந்தால் துவாரபாலகர்களும், பெண் தெய்வத்திற்குரிய கோபுரமாக இருந்தால் துவாரசக்திகளும் அமைக்கப்படுவர். தூரத்தே நின்று கோபுரத்தை வழிபட்டு பின் துவாரசக்திகளை வணங்கி அனுமதி பெற்று கோவிலினுள் செல்லவேண்டுமென்பது ஆலய வழிபாட்டிற்குரிய ஒழுங்காகும்.

கோபுரமானது உபபீடம், அதிட்டானம், சுவர், மஞ்சம் என்றும் அதன் மேல் கர்ணகூடு, மஞ்சம் என்றும் அதன் மேல் கர்ணகூடு, மஞ்சம், கண்டம், சிகரம், தூபி என்றும் பல அங்கங்களைக் கொண்டதாகும். மேலே அமையப்பெறும் சிகர அமைப்பு நீண்ட சதுர வடிவுடையதாக அமைக்கப்படும். கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கற்களாலோ அல்லது வேறு உறுதியான கற்களாலோ அமைக்கப்படும். வியாழ வரியின் மேல் செங்கற்களால் அமைக்கப்படும் வழக்கம் காணப்படுகின்றது. தற்போது துளையுள்ள கொங்கிறீட் கற்களையும் பயன்படுத்துகின்றனர். அதாவது பாரங்குறைந்த கற்களே வியாழமட்டத்தின் மேல் வைக்கப்படுகின்றன.

கோபுரமொன்றில் எண்ணற்ற வடிவங்கள் உள்ளன. பிரபஞ்ச அமைப்பில் காணப்படக்கூடியவைகளைக் குறித்துக் காட்டும் விதமாக மக்கள் கூட்டம், தேவர் கூட்டம், சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்குகள் என்பவற்றைக் கோபுரத்தில் அமைத்துக் காட்டுவர். இந்துப் பண்பாட்டு மரபுகளைத் தழுவியதாக இசை, ஓவியம், சிற்பம், நடனம் போன்ற கலையம்சங்களும் கோபுரத்தில் அமைந்திருக்கும். புராணக்கதைகளை அடியொற்றி இறைவன் திருவிளையாடல்களை அமைத்துக் காட்டுவதும் உண்டு. காலாதிகாலமாக இக்கலைகள் வாழ்வதற்கு கோபுரங்களில் உள்ள சிற்பங்கள் வழிசமைக்கின்றன. சமூகத்தின் உயர்விற்காக வாழ்ந்த மனிதர்களைக் கூட கோபுரத்தில் அமைக்கும் வழக்கமும் உள்ளது.

கோவிலில் நுழைவதற்கு வசதியில்லாதவர்கள் கோபுரத்தில் இறை அம்சத்தைக் கண்டு வழிபாடாற்றும் வசதி உள்ளது. கோபுரத்தைத் தூல லிங்கமென அழைக்கும் வழக்கம் இதனால் ஏற்பட்டிருக்கலாம். மக்களுள் இருந்த சமூக வேறுபாடுகள் காரணமாக கோபுர தரிசனத்துடன் வழிபாட்டை முடித்துக் கொள்ளும் தன்மையும் சில சமூகத்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

## கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

கோபுர தரிசனம் பாவவிமோசனம் போன்ற பொன்மொழிகள் இச்சூழமைவிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். இராஜகோபுரத்தின் மேல்நிலை (தளங்கள்) ஒற்றைப்படை எண்ணிலேயே அமைந்திருக்கும். இதன் தத்துவார்த்த விளக்கத்தைக் குறிப்பிடும் சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் "மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று இவ்வாறு அமைந்துள்ள நிலைகள் (மாடங்கள்) ஒன்றன்பின் ஒன்றாக ஒற்றையெண்ணிலேயே காணப்படும். இதில் 3 நிலைகள் ஜாக்கிரத, ஸ்வப்ன, சுழுத்தி என மூன்று அவத்தைகளைக் குறிக்கும். ஐந்து தளங்கள் ஐம்பொறிகளைக் குறிக்கும். ஏழு தளங்கள் ஐம்பொறிகளோடு மனம், சித்தத்தையும் குறிக்கும். ஒன்பது தளங்கள் ஏழு தளங்களுக்குரிய அம்சங்களுடன் சித்தம் அகங்காரம் ஆகிய இரண்டையும் சேர்த்துக் குறிக்கும்" என்கிறார்.

## தமிழ்நாடு அரசின் சின்னமாகக் கோபுரம்

கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பன சிறந்தோங்கி நிற்பதன் அடையாளமாகக் கோபுரத்தைக் கொள்ளமுடியும். இந்தியா சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் தமிழக அரசின் சின்னமாக ஸ்ரீ வில்லிபுத்தூர் கோவில் கோபுரத்தை அமைத்தனர். மதச்சின்னத்தை அரசுச் சின்னமாக்கலாமா? என அப்போதைய பிரதமர் நேரு இச்சின்ன வடிவமைப்புக்குப் பொறுப்பேற்ற சென்னை மாகாண முதல்வர் ஓமந்தூர் இராமசாமிச் செட்டியாரிடம் விளக்கம் கோரினாராம். கோபுரம் மதச்சின்னமல்ல. தமிழர்களின் பெருமையின் சின்னம். தமிழகக் கட்டிடக்கலைக்குள்ள சிறப்பு கோபுரம் தானென மாகாண ஆளுநர் பதிலளித்தாராம். பதிலால் திருப்திப்பட்ட நேரு தமிழக அரச இலச்சினையாக கோபுரச் சின்னத்தை ஏற்றுக்கொண்டார்.

# நினைவஞ்சலி



**அமரர்**

## திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அம்மையார்

**அவர்கள்**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும்

"அருள் ஒளி" சஞ்சிகையின் ஆசிரியருமாகிய

**கலாநிதி செஞ்சொற் செல்வர்**

**ஆறு. திருமுருகன் அவர்களின்**

அருமைத் தாயார்

**சரஸ்வதி ஆறுமுகம் அம்மையார்** அவர்கள்

14-12-2016இல் சிவபதப்பேறு பெற்றமை குறித்தும்

அவர் தம் சீரிய வாழ்வு குறித்தும்

நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறோம்.

## நிர்வாகசபை

துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
*தெல்லிப்பழை.*

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
*தெல்லிப்பழை.*

# இலங்கையில் திருப்பொற்சுண்ணப் பதிகத்திற்கு ஏற்பட்ட கதி ஏனையவற்றிற்கும்?

பேராசிரியர் சு. சுசீந்திரராஜா அவர்கள்

இலங்கையில், சைவ சமயத்தைப் பின்பற்றும் யாழ்ப்பாணத்தவர்களின் வீடுகளில், திருவாசகத்தில் உள்ள திருப் பொற்சுண்ணப் பதிகப் பாடல்கள் செத்த வீடுகளில் மரணச் சடங்கின்போது மட்டுமே பாடப்படுகின்றன. ஏனைய நாட்களில், அவற்றை வீடுகளில் பாடுவது அமங்கலம் எனக் கருதி விலக்கப்படுகிறது. சிறுவர்கள் அறியாத்தனமாக அவற்றைப் பாடமுற்பட்டால், ஏனையோர் உடனடியாகத் தடுத்து நிறுத்தி விடுவார்கள். யாழ்ப்பாணத்தவர்களின் வீடுகளில் மரணச் சடங்கின்போது திருப்பொற் சுண்ணப் பாடல்கள் இருபதும் பாடிச் சுண்ணம் இடிப்பது நெடுங்கால வழக்கம். கிரியைகளைச் செய்யும் சைவக் குருக்களோ, வேறு யாரும் ஒருவரோ திருப்பொற்சுண்ணப் பாடல்களை ஒவ் வொன்றாகப் பாடுவார். பூதவுடலுக்குக் கொள்ளி வைப்பவர் ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் ஒரு முறை உரலில் சுண்ணம் இடிப்பர். செத்த வீட்டில் இடம்பெறும் கிரியைகளில் திருப்பொற்சுண்ணப் பாடல்கள் பாடுவதும், உரலில் சுண்ணம் இடிப்பதும் தவிர்க்க முடியாத முக்கிய மான நிகழ்வுகள்.

யாழ்ப்பாணத்தில், கோயில் வழிபாட்டில் திருவாசகப் பதிகங்களிலிருந்து பாடல் களைப் பாடுபவர்கள் திருப்பொற்சுண்ணப் பாடல்களை என்றுமே பாடுவதில்லை. ஆனால், விதிவிலக்காக சில கோயில்களில் தீர்த்தத் திருவிழாவின்போது மட்டும் கிரியையின் ஓர் அங்கமாக திருப்பொற் சுண்ணப் பாடல்களைப் பாடுகின்றார்கள்.

திருப்பொற்சுண்ணப் பாடல்கள் அனைவருக்கும் பழக்கமானவை. காரணங் கூறவேண்டியதில்லை. அவை பற்றிக் கிராமங்களில் வயதான மக்களிடம் கேட்டால், அவர்கள், தாம் அப்பாடல்கள் பற்றி எண்ணும்போது அல்லது அவற்றை மௌனமாகத் திருவாசகத்தில் படித்துப் பார்க்கும்போது, தம்மையறியாமலே செத்த வீடு துயரமாக இருப்பதாகவும், ஏதோ சாவை அழைப்பது போல கூறுகிறார்கள். அத்தருணம், நல்ல காரியம் எதையும் செய்வதற்கு உணர்வு விரும்பத்தகாதது; பொல்லாதது.

மக்களின் மேற்குறித்த மனநிலைக்குக் காரணம் மரணச் சடங்கிற்கும் திருப்பொற் சுண்ணப் பாடல்களுக்கும் இலங்கையில் ஏற்பட்டுவிட்ட விடுபடமுடியாத பின்னிப் பிணைந்த, நெருக்கமான தொடர்பேயாகும். அமங்கலம் எனக் கருதுகிறார்கள் அல்லவா?

இன்று இலங்கையில் திருப்பொற் சுண்ணப் பாடல்கள் நாம் கூறியாங்கு அமைந்தமை கவலைக்குரியது. அன்று மணிவாசகப் பெருமான் அவற்றைத் தில்லையில் பாடியருளினார். அவர் பாடி யருளிய சந்தர்ப்பம் மங்களகரமானது. கீர்த்தித் திருவகவல் முதலிய மூன்று திருவகவல்களையும் அருளிச் செய்து,

அடிகளார் தில்லையில் எழுந்தருளி இருக்கும்போது, ஒருநாள் மகளிர் சுண்ணம் இடிக்கும் காட்சியைக் கண்டார். அவர்கள், தில்லைப் பெருமானது புகழை உலக்கைப் பாட்டாகப் பாடியவண்ணம் இடித்தார்கள். அதனைக் கொண்டு, செய்வத்திரு நிரம்ப, திருப்பொற்சுண்ணப் பதிகத்தைப் பாடி அருளினார். ஆனால், அப்பாடல்கள் குறித்த இன்றைய சமூக நோக்கோ விபரீதமாகிவிட்டது!

இன்று, பூதவுடலைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும்போது சிவபுராணத்தைப் பாடுவது வழக்கமாகி வருகிறது. சிவபுராணமும் திருப்பொற்சுண்ணம் போன்றது என்ற நினைப்பு சில இடங்களில் அரும்புகிறது போலத் தோன்றுகிறது. செத்த வீடு தவிர்ந்த இடத்து சிவபுராணம் பாடும் வழக்கம் குறைவடைய, குறித்த நினைப்பு வலுவடையக் கூடும். சிவபுராணத்தையும் ஒதுக்கிவிடும் காலம் வந்துவிடுமோ என்று கலங்க வேண்டியுள்ளது. மாற்றாக, மரணச் சடங்கின்போது நிலையாமை குறித்த (பக்திப்) பாடல்களை மட்டும் தெரிந்தெடுத்துப் பாடுவது பற்றி சைவப் பெருமக்கள் சிந்தித்தல் நன்று. பயன்படுத்துவதற்கு அத்தகைய பாடல்களின் ஒரு தொகுப்பை வரவேற்போம்.

மரணச் சடங்கின்போது திருவாசகத்திலுள்ள திருப்பொற்சுண்ணப் பதிகப் பாடல்களைப் பாடி பொற்சுண்ணம் இடிக்கும் வழக்கம். இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்கள் வீடுகளிலும் பல காலமாக நிலைத்து வருகின்றது. ஏனைய இடங்களில் இந்த வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.


## துர்க்காதேவி
## சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

**துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

- **இலவச வைத்தியசாலை**
- **இரவு பகல் சேவை**

SERVICE 24/7 HOURS


எமது தேவஸ்தானத்தின் முயற்சியால் அரச வைத்திய சாலையாக நன்முறையில் நடைபெறுகிறது. சகல நோய்களுக்கும் வைத்திய வசதி, நோயாளர் தங்கி வைத்தியம் செய்யலாம்.

## சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கலும் சான்றோர் கௌரவிப்பு நிகழ்வும் -- 07-01-2017





















92 ஆவது பிறந்தநாள்










92 ஆவது பிறந்தநாள்
07. 01. 2017

# கீதையை அறியாத கிழவி

திரு.செ. தனபாலசிங்கன் (B.A) அவர்கள்

பலனை நினையாமல் பணி செய்கின்றாள் ஒரு கிழவி. உபகாரத்தின் அடையாளமான கல்லின் நிழலிலே இறைவன் வீற்றிருக்கின்றான். அந்தப் புகழார்ந்த புண்ணியவதியின் கதை இதுதான்.

**இராஜராஜேசுவரம் :**

தஞ்சைமாநகரிலே மிகப்பெரிய ஆலயம் ஒன்றினை எழுப்பவேண்டும் என்பது இராஜராஜ சோழனுடைய நீண்ட நாள் விருப்பம். சோழநாட்டிலுள்ள சிற்பிகள், பிறநாட்டிலிருந்து வந்த சிற்பிகள் எல்லோருமே இரவும் பகலும் அந்தப் பெரிய கோவிலின் நிர்மாணத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆலய விமானத்தை வானளாவக் கட்டிவிடவேண்டும் என்பது சோழனுடைய ஆவல். சிற்பிகளும் ஆலய விமானத்தை அமைக்கத் தொடங்குகிறார்கள். விமானம் வானளாவ வளர்கின்றது. தமிழ்நாட்டுக் கலைச்செல்வமே ஏற்றம் பெறுகின்றது. விமானத்தின்மேல் வெயிலையும் பொருட்படுத்தாது வேலை நடந்து கொண்டிருக்கின்றது. சிற்பிகளுக்குத் தாகம் உண்டாகும்போதெல்லாம் தண்ணீர் கொடுக்கவும் ஏற்பாடாகி இருக்கின்றது. கொடுக்கின்ற தண்ணீர் இனிமையாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கின்றது. விலாமிச்சை வேரின் மணமுடயதாக இருக்கின்ற நீரைப் பருகித் தாகம் தணிகின்றார்கள். இந்த இனிமையான தண்ணீர் எங்கே இருந்து வருகின்றது என்று சிற்பிகள் எல்லோரும் விசாரிக்கத் தொடங்குகிறார்கள். இரகசியம் வெளியாகின்றது. ஒரு கிழவி, "நம்முடைய சோழ மகாராஜா எவ்வளவு அன்பாக இந்த ஆலயத்தைக் கட்டுகின்றார். சிற்பிகளும் சிரத்தையுடன் வேலை செய்கின்றார்கள். இந்தக் கைங்கரியத்திலே நானும் கலந்துகொள்ள வேண்டும்" என்று விரும்புகிறாள். பொன்னையும் பொருளையும் அள்ளி அள்ளிக் கொடுக்க அவளால் முடியுமா? தினந்தோறும் காலையிலே எழுகின்றாள். பெரிய மிடாக்கள் நிறையத் தண்ணீர் நிரப்புகின்றாள். விலாமிச்சை வேர் முதலியவற்றைப் போட்டுத் தாகத்துக் கேற்ற நீராக்கி வைத்திருக்கின்றாள். சிற்பிகள் அங்கே வருகின்றார்கள். தாகத்தைத் தீர்த்துக்கொள்கின்றார்கள். விமான வேலையில் ஈடுபட்டவர்களுக்கும் சிற்றாட்கள் அந்த நீரைக் கொண்டுபோய்க் கொடுக்கின்றார்கள். அந்த அருமையான நீரைத் தந்துதவும் கிழகி யாரென அறிகின்றார்கள். மாலைப் போதில் வேலை முடிந்ததும் அந்த மூதாட்டியிடம் சென்று அன்புடன் மனம் கலந்து பேசிக்கொள்கின்றார்கள்.

விமான வேலை நிறைவுறும் நாள் நெருங்கி வந்துகொண்டிருந்தது. சிற்பியர் தலைவன், நல்ல உள்ளம் படைத்தவன். ஆலய நிர்மாணத்தினாலே வருகின்ற புண்ணியத்தின் ஒரு பகுதியைத் தாகம் தீர்க்கத் தண்ணீர் தந்த தாய்க்கும் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறான். விமானவேலை முடிய ஒருநாள் மட்டும் இருக்கின்றது. "தாயே, நாளை விமான வேலை முடியப்போகின்றது. நாங்கள் வேலை செய்தபோதெல்லாம் எவ்வளவோ சிரமப்பட்டு எங்கள் தாகத்தைத் தீர்த்து வைத்தாய். அது மகா புண்ணியம். இந்த ஆலயத்திலே என்றும் நிலைத்திருக்கத்

தக்கதாக உன்னுடைய பொருள் ஒன்றை யேனும் வைக்கவேண்டும் என்பது எமது ஆசை. ஏதாவது கொடு" என்கிறான் சிற்பியல் தலைவன்.

கிழவி சிரிக்கிறாள். "நான் என்ன பெரிய காரியம் செய்துவிட்டேன்? வெறும் நீரைக் குடிக்கக் கொடுத்தேன். அவ்வளவு தானே. மகாராஜா பெரிய கைங்கரி யத்தை நிறைவேற்றினார். உங்கள் எல்லோருக்கும் அந்தப் புண்ணியத்திலே பங்கு உண்டு" என்கிறாள் கிழவி.

சிற்பியர் தலைவன் ஏதாவது கொடுக்கவே வேண்டும் என்று வற்புறுத்து கிறான். "நான் என்ன செல்வச் சீமாட்டியா தங்கம் வெள்ளியை அள்ளித்தர? என் வீட்டு வாசற்படிக் கல்லைவிட வேறு என்னதான் என்னால் தந்து உதவ முடியும்?" என்கிறாள் கிழவி. "அது போதும்; வாசற்படிக் கல்லையே கொடுத்துவிடு தாயே. உன்னுடைய புண்ணியம் நிலைகொள் வதற்கு இதுவே அடையாளக் கல்" என்று சொல்லிவிட்டு அந்தக் கல்லையே எடுத்துக் கொண்டு செல்கின்றான் சிற்பியர் தலைவன்.

விமானத்தின் சிகரத்திலே கலசம் பதிக்கப்படுகிறது. வானளாவ நிமிர்ந்து நிற்கிறது கோபுரம். சோழநாட்டுக் கலைச் செல்வம், இராஜராஜனின் அன்பு, இராஜ ராஜேசுவரம் என்னும் திருக்கோயிலின் விமானம் எல்லாம் தமிழ் நாட்டுக்கு மங்காப் புகழை ஈட்டித் தருகின்றன. திருக்கோயிற் கும்பாபிஷேகம் வெகு விமரிசையாகத் திகழ்கின்றது. உலகமே பாராட்டுகின்றது.

இராஜராஜ சோழனின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாதிருக்கின்றது. இறைவன் தான் எண்ணியதை நிறைவேற்றி அருளி னான் என்ற கர்வம்; நாம் நம் ஆற்றலால் இந்தப் பெரிய காரியத்தைச் சாதித்து விட்டோம் என்ற அகங்காரம்; வாழ்விலே மற்றவர்கள் நினைக்கவும் முடியாத திருப்பணியை நிறைவேற்றினோம் என்ற ஆணவம் ஆதியன அவன் உள்ளத்திலே தலைகாட்டுகின்றன. ஆனந்த அலைமோது கிறபோது சிறிதுநேரம் கண் அயர்கின்றான். கனவிலே இறைவன் தோன்றுகின்றான்.

"திருவருள் கூட்ட எளியேன் ஆலயத்தைக் கட்டி முடித்தேன். நான் செய்த பாக்கியமே பாக்கியம்" என்று மனமுருகி இராஜராஜன் சொல்கின்றான். "ஆம், நீ செய்தது பாராட்டவேண்டியதுதான். ஆனால் உன் அன்பினால் உருவாகிய ஆலயத்தில் ஒரு கிழவியின் நிழலிலே நான் வாழ்கின்றேன்" என்று கூறிவிட்டு மறைகின்றான் இறைவன்.

**கிழவியின் நிழல் :**

கண் விழிக்கின்றான் இராஜராஜன். "இறைவன் கனவில் எழுந்தருளி வந்தான். கிழவியின் நிழலிலே இருப்பதாகத் திரு வாய் மலர்ந்தருளினான். அந்தக் கிழவி யார்? அந்தப் புண்ணியவதி எங்கே இருக்கின்றாள்?" என்று விசாரிக்கத் தொடங்குகிறான். ஆனால் அந்தக் கிழவியை யாருக்குத் தெரியும்? சிற்பியர் தலைவனுக்கு மட்டும் இரகசியம் தெரியும். அரசனுக்கு இரகசியத்தைச் சொல்ல முத லிலே அஞ்சுகின்றான் சிற்பியர் தலைவன்.

பின்பு ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொண்டு பேசத் தொடங்குகிறான்.

"மகாராஜா, விமானவேலை செய்த காலத்திலே ஒரு கிழவி எங்களுக்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுத்தாள். அந்தக் கைங்கரியத்துக்கு எமது நன்றியைத் தெரிவிக்குமுகமாக இந்த ஆலயத்தில் அவளுடைய பொருள் ஒன்றைச் சேர்த்து விட விரும்பினோம். அவள் தன்னிடம் எதுவுமே இல்லை என்று கூறி, வாசலில் இருந்த படிக்கல்லைத் தந்தாள். விமான வேலை முடியும் தறுவாயில் இருந்தபடி யால் விமானத்தின் உச்சிக்கல்லாக அதனை வைத்தோம்" என்று உள்ளதை உள்ளபடியே சொல்லிவிடுகின்றான் சிற்பியர் தலைவன்.

அரசன் கண்களில் நீர் ததும்புகிறது. "பயனை நினையாமல் பணி செய்த கிழவியே இறைவனுக்கு நிழல் கொடுக்கும் பாக்கியத்தைப் பெற்றாள். அந்தச் சீமாட்டியை நான் தரிசிக்கவேண்டும்" என்று விரைந்து ஓடுகின்றான். கிழவி வரு கின்றாள். "தாயே, உன் அன்பே அன்பு. அந்த அன்பின் நிழலிலே ஆண்டவன வசிக் கின்றான். நான் கட்டினேன் என்று எண்ணிய அந்த ஆலயத்திலே அகங்காரத்தின் வெம்மை வீசுகின்றது. தன்னலமற்ற உபகாரத்தின் நிழலிலே என் குலதெய்வம் பிருகதீசுவரன் உள்ளம் குளிர்ந்து கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான். என் உள்ளம் திறக்கப்பட்டுவிட்டது" என்று கிழவியை வாயார மனமார வாழ்த்து கின்றான் இராஜராஜன்.

கர்மங்களைப் பற்றில்லாமல், பலனைக் கருதாமற் செய்தல் துறவு மார்க்கத்திலும் சிறந்தது. இம்மையில் பட்டம் பதவி, பேர் புகழ், புத்திர பாக்கியம், செல்வம், தீர்க்காயுள் அமையவேண்டும் என்று ஆசைப்படுதலும் மறுமையில் சுவர்க்காதி பதவிகள் வேண்டும் என்று விரும்பு தலுமாகிய இவை எல்லாம் காமியகர் மங்களாம். இத்தகைய ஆசைகளை அறவே நீக்குதல் சந்நியாசம் என்றால் கிழவியும் சிறந்த சந்நியாசி தானே! சந்நியாசம், தியாகம் இரண்டும் ஒன்றே என்றால் கிழவியைவிடத் தியாகத்துக்கு எடுத்துக் காட்டாக வேறு யார் இருக்கின்றார்கள்? சுருக்கமாகச் சொன்னால், கீதையில் பல இடங்களில் பகவான் வற்புறுத்தி எதனைச் சொல்லிவந்தானோ, அதனைக் கீதையை அறியாத கிழவி செய்துவிட்டாள். இந்த நிலையைச் சன்மார்க்க நெறி நின்ற மாணிக்கவாசகப் பெருமான்,

**"கயல்மாண்ட கண்ணிதன்**
**பங்கன்எனைக்கலந் தாண்டலுமே**
**அயல்மாண் டருவினைச்**
**சுற்றமுமம்மாண்டு அவனியின் மேல்**
**மயல்மாண்டு மற்றுள்ள**
**வாசகம்மாண்டு என்னுடைய**
**செயல்மாண்ட வாபாடித்**
**தென்னேணங் கொட்டாமோ".**

என்றும்,

**"வான்கெட்டு மாருதம் மாய்ந்துஅழல்நீர் மண்கெடினும்**
**தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு**
**ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டுஎன் உள்ளமும்போய்**
**நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."**

என்றும்,

தம்முடைய அனுபவமாகப் பாடுவார்.

நன்றி : ஆசிரியரின் "கீதை அமுதம்"

# கோவிலில் வழிபட வாருங்கள்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
அவர்கள்

"கணாதிபா எழும்பையா, அம்பிகை எழும்பம்மா"

கணாதிபனதும் அம்பிகையினதும் அம்மா காலையில் மூன்றாவது தடவையாக அவர்களைத் துயிலெழுப்ப முயன்று கொண்டிருந்தாள்.

காலைக்கடன்களை முடித்தபின் கோவிலுக்குப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த அம்மம்மா புரண்டு படுத்த பிள்ளைகளின் அருகே வந்தமர்ந்தார்.

"இன்றைக்கு வெள்ளிக்கிழமை. அம்மம்மா கோவிலுக்குப் போகப் போகிறேன். நீங்களும் வாருங்கள், எழும்புங்கள்".

"இன்றைக்குப் பள்ளிக்கூடம் இல்லை. இன்னும் கொஞ்ச நேரம் நித்திரை கொள்ள விடுங்கோ".

அம்மம்மா கோவிலுக்கு வருமாறு அழைத்ததற்கு கணாதிபனின் பதில் இது.

"ஓம் அம்மம்மா. நானும் படுக்கப் போகிறேன்" என அம்பிகையும் அண்ணன் கணாதிபனை வழிமொழிந்தாள்.

"இன்றைக்குப் பள்ளிக்கூடம் நடந்திருந்தால் எழும்பிப் போயிருப்பீர்கள் தானே. தனிப்பட்ட வகுப்பு இருந்தாலும் எழும்பியிருப்பீர்கள். கலியாண வீடு வேறேதாவது நிகழ்ச்சி என்றால் இதையும் விட முன்னதாக எழுந்து வெளிக்கிட்டிருப்பீர்கள். கோவிலுக்குப் போவது அவசியமில்லாத ஒன்றாகத் தெரிகிறது, என்ன?" என அம்மம்மா சற்றுக் கண்டிப்பாகக் கூறினார்.

"என்ன அம்மம்மா விடமாட்டீர்களாம்" என அம்பிகை சிணுங்கலுடன் கூறினாள்.

"அனைத்தும் அந்த ஆண்டவனால் தான் நடக்கிறது. உங்களுக்குப் படிப்பைத் தருபவன் இறைவன். அதைமட்டுமல்ல, தேவையான எல்லாவற்றையும் கடவுள் தந்திருக்கிறார். உங்களை ஒவ்வொரு கணமும் வழிநடத்துகிறார். அவரைப் போய்க் கும்பிடுவது முக்கியமான ஒன்றாய் உங்களுக்குத் தெரியவில்லை. பள்ளிக்கூடத்தில் சோதனை என்றால் மட்டும் சுவாமியைக் கும்பிட்டு துணைக்கு அழைப்பீர்கள்".

அம்மம்மா இவ்வாறு சொல்லத் தொடங்கியதும் அம்பிகை எழுந்து அமர்ந்தாள். கணாதிபனுக்கும் உறக்கம் முற்றாகக் கலைந்துவிட்டது.

"சிவபெருமான் எங்கும் நிறைந்தவர். அவரைக் கோவிலிலே போய்த்தான் கும்பிடவேண்டுமா?"

கோவிலுக்குப் போகாதுவிட ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து இப்படிக் கேட்டான் கணாதிபன்.

"சிவபெருமான் எங்கும் எதிலும் இருக்கின்றார் என்பது உண்மை. ஆனால் என்னாலோ உங்களாலோ அப்படி அவரைக் கண்டு வணங்கமுடியாது. அத்தகைய மனப்பக்குவம் எம்மிடமில்லை. இதோ இந்த மேசையில்கூட அவர் இருக்கிறார். இந்த மேசையை சிவபிரானாக எண்ணி அவரில் மனமொன்றி எம்மால் பிரார்த்தனை செய்ய இயலுமா?

அம்மம்மா இப்படிக் கூறிக்கொண்டிருக்கும்போதே கலகலவென அம்பிகை சிரிக்கவாரம்பித்தாள்.

"எதற்காக இப்போது சிரிக்கிறாய்?" என்று சினத்துடன் கேட்டான் கணாதிபன்.

"இல்லை, இல்லை அண்ணா. மேசைக்கு முன்னாள்...." என்று ஆரம்பித அம்பிகை மேலே கூறமுடியாமல் சிரிக்க ஆரம்பித்தாள்.

"இவள் ஏன் சிரிக்கிறாள் அம்மம்மா?"

அம்பிகையின் சிரிப்பைப் பார்த்து முறுவலித்தபடியே "எனக்கும் காரணம் தெரியவில்லை" என்றார் அம்மம்மா.

"அது அண்ணா நீங்கள் மேசைக்கு முன்னாலிருந்து தேவாரம்பாடுவதைக் கற்பனை செய்து பார்த்தேன்" என்ற வண்ணம் தன் சிரிப்பைத் தொடர்ந்தாள் அம்பிகை.

"பார்த்தீர்களா இதுவே அம்பிகைக்குச் சிரிப்பாக இருக்கிறது. சாதாரண மக்களாகிய எம்மால் அப்படிக் கும்பிட இயலாது. ஞானிகளால்தான் அப்படி இறைவனை எங்கும் காண இயலும். 'கோயில்' என்றால் கோ அதாவது இறைவன் இருக்கும் இல்லம் என்று பொருள்படும். அங்கு போவதென்றால் குளித்து சுத்தமாக வழிபட ஏற்ற தூய்மையான மனதுடன் நாம் செல்வோம். இறைவனை வழிபாடு செய்ய மலர்கள் முதலிய பொருட்களை எடுத்துச் செல்வோம். கோயிலும் நாம் பிரார்த்தனை செய்ய ஏற்ற சூழலுடன் இருக்கும். அங்கு நடைபெறும் பூசை, தீபாராதனை போன்ற ஒவ்வொரு நிகழ்வும் எங்கள் மனங்களை இறைவனுடன் இணைக்கும். இங்கிருந்து நாம் கும்பிடும்போது எங்கள் உள்ளங்களை நாங்கள்தான் கடவுளுடன் ஐக்கியப் படுத்தவேண்டும்.ஆனால் கோவிலில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கும் போதும் கேட்கும்போதும் மனம் இறைவனை நினைப்பதற்குத் தூண்டப்படுகிறது. கோவிலுக்கு அண்மையில் நிற்கும் போதே மணியோசை கேட்டால் "சிவ சிவா" என நா கூறும். மனம் கர்ப்பக் கிரகத்தில் உள்ள சிபெருமானை நினைத்துத் துதிக்கும். அப்படியிருக்கும்போது கோவிலின் உள்ளே சென்று வணங்கத் தொடங்கினால் எப்படியிருக்கும்? இதனால்தான் 'ஆலயம்' என்று கூறுகிறோம். ஆன்மா லயப்படும் இடம் ஆலயம். இப்படியே கதைத்துக் கொண்டிருந்தால் நேரம் போய்விடும். எழுந்துபோய் பல் துலக்கி, குளித்து கோவிலுக்குப் போக ஆயத்தமாகுங்கள்".

அம்மம்மாவுடன் கோவிலுக்குச் செல்லத் தயாராகுவதற்கு இருவரும் எழுந்து சென்றார்கள்.

"அம்மா கோவிலுக்குப் போகப் போறம். நேற்றுப் போட்ட அந்த வடிவான சட்டை எங்கேயம்மா?" என்று கேட்டுக் கொண்டு உள்ளே போனாள் அம்பிகை.

"இங்கே வா அம்பிகை, கோவிலுக்கு அழகான, உயர்ந்தரகமான உடை போட வேண்டுமென்று யாரும் கூறவில்லை. துவைத்துத் தூய்மையான எங்கள் கலாசாரத்தைப் பேணும் உடையணிந்து போவதுதான் அவசியம்" என்று அம்மம்மா அம்பிகைக்கு அறிவுரை வழங்கினார்.

அம்மம்மாவின் சொற்படி அவர்களிருவரும் கோவிலுக்குப் புறப்பட்டார்கள்.

# தைப்பூசம்

பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா
(கோப்பாய் சிவம்)

மைப்பூசு மொண்கண்மட நல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சர மமர்ந்தான்
நொய்ப்பூசு மொண்பழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.

சம்பந்தர் (2-183-5)

தைப்பூச நன்னாளில் சிவசக்தி ஐக்கியத்தையும் மேம்பாட்டையும் விளக்கும் புனிதமான ஒரு பெருநாளாகும் தை மாதம் உத்தராயணம் தேவர்களின் பகற்பொழுது என்பதால் தை மாதம் அவர்களின் காலைப்பொழுதாகும். சிவாம்சமான சூரியன் மகரராசியில் இருக்க சக்தியம்சமான சந்திரன் கடக இராசியில் (பூச நட்சத்திரம்) ஆட்சி பெற்றிருக்க சூரிய சந்திரர்கள் பூமிக்கு இருபுறமும் நேர் கோட்டில் நிற்றல் தைப்பூசத்துடன் இணைந்த பௌர்ணமியில் நிகழும்.

உலக சிருஷ்டி ஆரம்பமானது இத்தினத்திலே தான். ஆண்டவன் முதலில் ஜலத்தையே படைத்தார். அதிலிருந்து பிரமாண்டம் உருவானது. இதனை நினைவூட்ட பல ஆலயங்களில் இத்தினத்தில் தெப்போற்சவம் நடைபெறுவதுண்டு.

சிவசக்தி ஐக்கியமான முருகப்பெருமான் மாட்சிமை பெறும் தினமாகவும் இது அமைகிறது. முருகன் ஆலயங்களில் அபிடேகம், திருவிழா முதலியன நிகழ்த்தப்படுகின்றன. வாயு பகவானும், வருணதேவனும், அக்கினி தேவனும் ஒரு சமயம் தமது வலிமையைப் பற்றி பெருமை பேசித் தம்முள் போட்டியிட்டனர். அப்போது அவர்கள் அருகில் ஒரு சிறு துரும்பு காணப்படவே வாயு பகவான் அதனை அசைக்க முயன்று தோற்றார். அக்கினி தேவன் அதனை எரிக்கமுயன்று தோற்றார். வருண பகவான் அதனை நனைக்க முயன்று தோற்றார். மூவரும் இது கண்டு திகைத்து அசைவற்று நின்றனர். அப்போது நாரத முனிவர் அங்கு தோன்றி எல்லோருக்கும் மேலான பரம்பொருள் சக்தியை எடுத்துரைத்து அவர்களது கர்வத்தை அடக்கினார். தைப்பூச நன்னாளில் அவர்களது அருட்சக்தி அதிகரிக்க அருள்செய்வதாக ஆண்டவன் வாக்களித்தார்.

பதஞ்சலி, வியாக்கிரதபாதர் முதலானோர் தரிசிக்க சிவபிரான் ஆனந்த தாண்டவம் ஆடியதும் தைப்பூச நன்னாளிலே தான். இப்புனித நாளில் யாவரும் அசௌகரியம் நீங்கி ஆரோக்கியமும் ஆற்றலும் பெறுவர். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற வாக்கியத்திற்கு இணங்க தை பிறந்த சில நாட்களில் இத்தினமும் தோன்றிப் புத்துணர்ச்சி ஊட்டி மண வாழ்வில் மகிழ்ச்சியையும் சகல மங்கலங்களையும் ஊட்டுகிறது.

*நன்றி : சைவ விரதங்களும் விழாக்களும்*

# இதய அஞ்சலி



**அமரர்**

## திரு. நாகலிங்கம் தவமணிநாயகம்

**அவர்கள்**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்
நிர்வாகசபை நீண்டகால மூத்த உறுப்பினரும்
தேவஸ்தானத்தின் மின்வேலை பராமரிப்பாளராகவும்
பணியாற்றிய
நாகலிங்கம் தவமணிநாயகம் அவர்கள்
15-01-2017இல் அமரத்துவம் அடைந்தார்.
அவர்தம் பணிகளை நினைந்து
அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருவடியைச்
சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகசபை**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
*தெல்லிப்பழை.*

சிறுவர் விருந்து

# பொன்னான ஈசன்

**அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து.

உங்களில் பலர் புதிய பாடசாலைக்குப் போயிருப்பீர்கள். புதிய நண்பர்களும் கிடைத்திருப்பார்கள். எல்லாமே உங்களுக்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவனவாய் இருக்க வாழ்த்துக்கள். இன்று ஒரு பெண்ணுக்காக இறைவன் செய்த அருள் விளையாட்டு ஒன்று பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

தமிழகத்திலே திருப்பூவணம் என்று ஒரு தலம் உள்ளது. பண்டைக்காலத்தில் சிவாலயங்களில் பூஜை விழாக்களில் நாட்டிய அஞ்சலி, இசை ஆராதனை, வாத்திய ஆராதனை என்பவையும் தவறாமல் இடம்பெறும். இந்தப் பூவணத்தில் உள்ள திருப்பூவணநாதர் ஆலயத்திலே நித்தியம் நடன அஞ்சலி செய்வதற்கென பொன்னனையாள் என்ற நடன வித்தகி நியமிக்கப்பட்டிருந்தாள். மாளிகை, பணிப் பெண்கள், மாதாந்த ஊதியம் எல்லாம் அரசனால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. சகல வசதிகளோடும் வாழ்ந்த அந்த இளம் பெண் உல்லாச வாழ்வில் ஈடுபாடு கொள்ளவில்லை. அவளது சிந்தனை அறவழியில் அவளை நெறிப்படுத்தியது. மனிதரைக் கவரும் முறையில் அவள் நடப்பதில்லை. தனது ஆடல் பாடல் திறமைகள் முழுவதும் சிவபிரானுக்கே உரியன என்ற அர்ப்பணிப்பு பாங்கினில் வாழ்ந்தாள்.

அத்துடன் தினசரி அவளது மாளிகையில் ஏழைகளுக்கும், சிவனடியார்களுக்கும் அன்னமிடும் பணியையும் ஒழுங்காகச் செய்து வந்தாள். இறைவன் சந்நிதியில் நடனமாடும் போதெல்லாம் இறைவனது அழகிய திருவுருவத்தில் அவள் மனம் பதிந்துவிடும். மனதில் பேரன்பு பெருக உருகிப் பாடி ஆடுவாள். அதே சமயம் அப்படி ஒரு அழகிய திருவுருவைத் தனிப் பசும்பொன்னால் செய்துவைத்து வழிபட வேண்டும் என்ற ஆசை அவள் மனத்துள் உருவாகியது.

காலநடையில் அந்த எண்ணம் தீவிரமாக வலுப்பெற்றது. ஆனால், தனித் தங்கத்தால் இறைவன் திருமேனியை வடிக்க நிறையத் தங்கம் வேண்டும். அதை வாங்கிட நிறையப் பணம் வேண்டும் அல்லவா.... அவளுக்குக் கிடைத்த ஊதியம் முழுவதும் அன்னதானப் பணிக்கே செலவாகிவிடும். மீதம் இராது. இந்நிலையில் அவளால் பணத்தைச் சேமிக்கமுடியவில்லை. சிறிது சேமித்தால் அதைவிட அதிகமாகச் செலவிடும் நிகழ்வு வந்துவிடும்.... இப்படியே பல நாட்கள் கழிந்தன.

பொன்னனையாள் மனதில் கவலை குடிகொண்டது. தன் ஆசை நிறைவேற வழியில்லையே என அவள் பெரிதும் வேதனை அடைந்தாள். இந்நிலையில் ஒருநாள் ஒரு சாது அவள் வீட்டிற்கு வந்தார். பணிப்பெண்கள் அவரை வணங்கி "சுவாமி! திருவமுது செய்ய வாருங்கள்" எனப் பணிவோடு அழைத்தார்கள்.

நான் இங்கே சாப்பிட வரவில்லை. உங்கள் தலைவி பொன்னனையாளைப் பார்க்க வந்தேன். அவளைக் கூப்பிடுங்கள் என்றார் அந்தச் சாது. பணிப்பெண்களும் பொன்னனையாளிடம் சென்று இந்தச் செய்தியைச் சொன்னார்கள். அவளும் உடனே வாசலுக்கு வந்து சாதுவைப் பணிவோடு வணங்கினாள்.

"சுவாமி, அடியேன் பொன்னனையாள் தாங்கள் என்னைக் காண விரும்பிய காரணத்தை யான் அறியலாமா?" என விநயமாகக் கேட்டாள்.

"பெண்ணே! உன் மனத்தில் ஒரு பெரிய கவலை இருக்கிறது. அது என்ன என்று நீ என்னிடம் சொன்னால் அதைத் தீர்க்க நல்ல வழி நான் சொல்வேன்; சொல்! உன் மனக்கவலை யாது? என்று அந்தச் சாது புன்னகையுடன் கூறினார். தனது பேராசை பற்றி வெளியிட விரும்பாத அந்த பண்பான பெண் "சுவாமி! இறைவன் கருணையால் சகல வசதிகளும் எனக்கு உண்டு எனக்கென்ன மனக்கவலை? அப்படி ஒன்றும் இல்லை" என்றாள்.

சாது பெரிதாக வாய்விட்டுச் சிரித்தார். பெண்ணே! என்னிடம் நீ மறைப்பதில் எந்தப் பலனும் இல்லை. யாம் எல்லாம் அறிவோம். நீ வணங்கும் அந்த சிவனின் திருமேனியைப் பசும்பொன்னால் செய்து பார்க்க உனக்கு ஆசை. அது நிறைவேறாத கவலை இரவு பகல் உன்னை வாட்டுகிறது! சரிதானா நாம் சொல்வது?" என்று சிரித்தபடியே கேட்டார் சாது.

"இவர் சாதாரண சிவனடியார் இல்லை. பெரிய சித்தர் போலிருக்கிறது..." என்று நினைத்த பொன்னனையாள் அவர் காலில் விழுந்து வணங்கி சுவாமி! நீங்கள் சொல்வதை என்னால் மறுக்கமுடியாது. ஆனால், பரதேசியான தாங்கள் எனக்கு எப்படி உதவமுடியும்?" என்று கேட்டாள்.

"முதலில் உன் வீட்டில் உள்ள பழைய இரும்பு, உதவாத செப்புப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் கொண்டு வா" என்றார் சாது. பணிப் பெண்களுக்குக் கட்டளை இட்ட பொன்னனையாள் வீட்டில் ஒதுக்கி வைத்திருந்த துருப்பிடித்த இரும்புப் பொருட்கள், உதவாத செப்புப் பித்தளைப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் சாதுவின் முன் கொண்டு வந்து குவித்தாள்.

"இவ்வளவுதானா? இன்னும் உளதா?" என்று கேட்ட சித்தர், அந்த உலோகப் பொருட்குவையின் மீது வீபூதியைத் தெளித்தார். ஒரு தனி இடத்தில் புதைத்து வைக்கச்

செய்தார். மறுநாள் எடுக்கச் சொல்லவிட்டுப் போய்விட்டார். அவர் சொன்னபடியே செய்த பொன்னனையாள் மறுநாள் அவற்றை வெளியில் எடுத்துப் பார்த்தாள். அத்தனையும் சொக்கத் தங்கமாக இருந்தன. பொற்கொல்லரை அழைத்து அவற்றைக் காட்டினாள். மாற்றுரைத்துப் பார்த்தவர்கள் அவ்வளவும் மாற்று இல்லாத சுத்தத் தங்கமாய் இருந்ததைக் கண்டார்கள்.

தனது மனத்தாள் அந்தச் சித்தரைத் தொழுது வணங்கிய பொன்னனையாள் சிறந்த பொற்சிலை ஒன்றை வடிப்பித்தாள். அழகிய பொன்னில் ஆன ஈசன் திருமேனி உருவாகி அவளிம் வந்து சேர்ந்தவுடன் அளவற்ற அன்புடன் அத்திருமேனியைப் பார்த்தாள். இணையற்ற எழிலுடன் அது இருந்தது. அன்பு மேலிட்டு அத்திருமேனியை அவள் தன் மார்புறத் தழுவி" இவரே என் அழகியர்!" என்று கண்ணீர் விட்டாள். ஒரு குழந்தையின் உடல் போல அப்பொற்சிலை குழைந்து அவளது அன்பில் இளகியது. பொன்னனையாள் கன்னத்தில் முத்தமிட்ட அடையாளமும், மார்புறத் தழுவிய அடையாளமும் அச்சிலையில் பதிந்தன.


பொன்னனையாளின் பக்தி உயர்வைக் கண்டு அனைவரும் அவளை வணங்கினர். அரசனும் ஆடல் தொழிலில் இருந்து விடுவித்து அவள் இறைபணி செய்ய அனுமதித்தான். இறைவனை வழிபட்டு முத்தியடைந்தாள் அப்பெண்ணரசி. அவள் உருவாக்கி வழிபட்ட பூவணநாதர் திருவுருவம் இன்றும் திருப்பூவணம் என்ற தலத்தில் உள்ள சிவாலயத்தில் வைத்து வணங்கப்படுகிறது. தழுவக்குழைந்த நாதர் என்ற பெயரோடு "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணிய திண்ணியராகப் பெறின்" என்று குறளும் சொல்கிறது.

## ஆன்மீகச் சிந்தனை

தீவிரமாகத் தியானம் செய்து அல்லும் பகலும் அது குறித்து சிந்தனையில் மனம் ஈடுபாடு கொண்டிருந்தால் அவருக்கு அருளுவதற்காக தியானநிலையில் இறைவன் அவர் முன் தோன்றலாம். அதனால் அவருக்கு மனநிறைவு ஏற்படலாம். அவருக்குக் கடவுள் தரிசனம் கிடைத்ததா இல்லையா என்பதைப் பிறரால் சொல்லவோ, புரிந்துகொள்ளவோ முடியாது. ஆனால் தியானம் முடிந்தபிறகு அவர் நடந்துகொள்ளும் முறையிலிருந்து மற்றவர்களுக்கு ஒருவாறு புரியலாம். அவர் கண்டது, தான் கற்பனை செய்துகொண்ட கடவுள் உருவமே. ஆனாலும் அதனாலேயே அவருடைய சித்தத்தின் தன்மை மாறிவிடும். கடவுளின் தரிசனம் கிடைத்ததனால் அவருடைய பண்புகளே மாறியிருக்கும். அவருடைய வாழ்க்கையில் அன்பும், கருணையும் நிறைந்து விளங்கும். அந்தப் பண்பட்ட நிலையிலிருந்தே தெய்வீக சாந்நித்தியத்தை நாம் அவரிடம் புரிந்து கொள்ளலாம்.

உ

துர்க்காதேவி துணை



# சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர் 2017

## ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

## அவர்களின்

## 92ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில்

*கௌரவம் பெறும் பெருமக்கள்*

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள்
அறநிதியச் சபை,

*07-01-2017*



# பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## அவர்கள்

| | |
|---|---|
| பெயர் | : அருணாசலம் சண்முகதாஸ் |
| பிறந்த திகதி | : 1940.01.02; திருகோணமலை |
| தற்போதைய நிலை | : யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாட் பேராசிரியர் |
| முகவரி | : 'கோகுலம்', 90, ஞானவைரவர் வீதி, கோண்டாவில்- கிழக்கு, கோண்டாவில், இலங்கை. |

**கல்வி**

1945 – 1959: புனித பிரான்சிஸ் சவேரியார் பாடசாலை, திருகோணமலை. வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், செங்கலடி., சிவானந்த வித்தியாலயம், கல்லடி உப்போடை,

1959 – 1963: இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை பட்டம்: கலைமாணி (சிறப்பு) முதற் பிரிவு பாடங்கள்: தமிழ் (சிறப்பு துணைப்பாடங்கள்) சமஸ்கிருதம், இந்திய வரலாறு

1969 – 1970: எடின்பறோப் பல்கலைக்கழகம், ஸ்கொட்லாண்ட், ஐக்கிய இராச்சியம். மொழியியல் டிப்ளோமாப் பட்டம்.

1970 – 1972: மொழியியலில் கலாநிதிப் பட்டம்

**பதவிகள்:**

1963 -2005: பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளராக, பேராசிரியராக, முதுநிலைப் பேராசிரியராகப் பணியாற்றியமை.

1982 – 1983 : விருந்துநிலைப் பேராசிரியர், மொழியியல் மற்றும் நைஜீரிய மொழிகள் துறை, இபாடன் பல்கலைக் கழகம், நைஜீரியா.

1982 Feb. - July : தலைவர், மொழி, பண்பாட்டுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

1983 . – 1984 ; 1990 – 1991: விருந்துநிலைப் பேராசிரியர், ஜப்பானிய மொழி மற்றும் இலக்கியத் துறை, கக்சுயின் பல்கலைக்கழகம், ஜப்பான்.

1988 : **International Who's Who Men of Achievement** நூலில் பெயர் பொறிக்கப்பட்டது. அனைத்துலகத் தன்வரலாற்று நிலையம், கேம்பிறிடஜ்

1995 Mar. – 1996 July : தலைவர், இசைத்துறை, இராமநாதன் நுண்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,

1997 - 1999 : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி

1998 August 10 – 25: பதில் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

1999 –2002 : மானிய ஆணைக்குழுவால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உயர்பட்டப் படிப்புகள்பீடத்தின் முதல் பீடாதிபதியாக நியமனம்.

2000 to 2003 : மலாயாப் பல்கலைக்கழக இந்தியவியல் துறையின் வெளிவாரி மதிப்பீட்டாளராக நியமனம்.

2005 -2008 : யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக வளம் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பளராக நியமனம்

2009 - 2010 : மதியுரைப் பேராசிரியர், மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

2010 Octob : Awarded Honorary Degree of Doctorum Litterarum (D.Litt.) by University of Jaffna.

2011 July - 2012 Nov : Member, appointed by the University Grants Commission to the University Council of the South Eastern University of Sri Lanka.

**பல்கலைக் கழகங்களிலும் வெளியிலும் வகித்த கல்விசார் பதவிகள்:**

1977 : பிரதம ஆசிரியர், **சிந்தனை,** யாழ்ப்பாணப பல்கலைக் கழகக் கலைப்பீட ஆய்விதழ்.

1975 தொடக்கம்: பின்வரும் பல்கலைக் கழகங்களின் கலாநிதிப்பட்டத் தேர்வுமதிப்பீட்டாளர்: அண்ணாமலை, அழகப்பா, சென்னை, மதுரை .பாரதிதாசன், மனோன்மணியம் சுந்தரனார, பாரதியார், அன்னைதெரேசா, காந்திக்கிராம் பல்கலைக்கழகம், மலாயாப் பல்கலைக்கழகங்கள்.

1997 July தொடக்கம் : உலக திராவிடமொழி மன்றத்தின் நிரிவாகக் குழு உறுப்பினராகத் தெரிவு, திருவனந்தபுரம், கேரளா.

**பங்குபற்றிய மாநாடுகள், கருத்தரங்குகள்(தெரிவுசெய்யப்பட்டவை)**

1968 இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, சென்னை,

1983. ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு,

1987 6ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு. கோலாலம்பூர், மலேசியா,

1987: 14ஆவது உலக மொழியியலாளர் மாநாடு, கிழக்கு பெர்லின், ஜெர்மனி

1998 சங்க இலக்கியம்" கருத்தரங்கு, உலகத் தமிழாராய்ச்சி மன்றம், சென்னை.

1999 "அயல்நாடுகளில் தமிழ் வளர்ச்சி", கருத்தரங்கு, உலகத் தமிழாராய்ச்சி மன்றம்.

2000"உலகத் தமிழ் இலக்கிய வரலாறு" கருத்தரங்கு, உலகத் தமிழாராய்ச்சி மன்றம்,

2000 2ஆவது இராமாயண, மகாபாரத பன்னாட்டுக் கரத்தரங்கு. உதயண பல்கலைக் கழகம், பலித் தீவு, இந்தோனீசியா

2004ஆவது சைவ மாநாடு, இலண்டன்.

2002 5ஆவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு, சிங்கப்பூர்.

2002 "உலக அரங்கில் தமிழ்", கருத்தரங்கு, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், சிங்கப்பூர்,

2003"அருள்மிகு முருகன்" பன்னாட்டுக் கருத்தரங்கு, கோலாலம்பூர், மலேசியா.,

2003 6ஆவது உலகத் தமிழாசிரியர் மாநாடு, டேர்பன், தென்னாபிரிக்கா.

2007 பாரதி-125 பன்னாடடுக் கருத்தரங்கு, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்.,

2008 International Symposium on Tamil as a Classical Language, Institute of Asian Studies, Chennai, 17-20 January,

2008 "உலகப் பண்பாட்டுக்குத் தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் பங்களிப்பு", பன்னாட்டுக் கருத்தரங்கு, ஏ.வி.சி. கல்லூரி, மயிலாடுதுறை, தமிழ்நாடு.,

2008 "தமிழியல்: அண்மைக்கால ஆய்வுகளும் எழுத்துக்களும்", பன்னாட்டுக் கருத்தரங்கு, தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.,

2008 4ஆவது உலக சைவசித்தாந்த மாநாடு, மதுரை. ,

2008 International Conference on "Sri Lankan Diaspora", University of Malaya, Mala1ysia, August 29th to 3rd September.

2010 செம்மொழி மாநாடு, கோவை

2013 உலகத் தமிழியல் மாநாடு, தலைமை ஏற்று நடத்தியமை, இலண்டன் பல்கலைக்கழக ஆசிய ஆபிரிக்க கற்கைப் புலம், இலண்டன்.

**பரிசுகள், விருதுகள்:**

1987 :கொழும்புத் தமிழ்ச் சங்க அ. சபாரட்ணம் நினைவுப் பரிசு: **தமிழ் மொழி இலக்கண இயல்பு** நூலுக்கு.

1987. கலாநிதி மனோன்மணியுடன் இணைந்து எழுதிய **இத்தி மரத்தாள்** நூலுக்கு யாழ். இலக்கிய வட்டப் பரிசு.

1991: Awarded Abe Fellowship by Gakushuin University to participate in the Research Project: "Asian Gods" in the Institute of Oriental Culture.

**1999 Sept.: தமிழின் பா வடிவங்கள்** நூலுக்கு சம்பந்தன் விருது.

2000 Sept.: **தமிழின் பா வடிவங்கள்** நூலுக்கு வட-கிழக்கு மாகாண பரிசு.

2001 Sept: வட-கிழக்கு மாகாண ஆளுநர் விருது.

2005 March –April :Awarded a grant by UNESCO, New Delhi to visit Media Studies Institutions in India and the Danish School of Journalism in Arhus, Denmark.

2008 :இலங்கை அரசின் "சாகித்திய ரத்னா" விருது.

**கல்வி, கல்விசாரா தேசிய சேவைகள்**

| | |
|---|---|
| 1974-76 | உறுப்பினர், இலங்கைக் கலாசாரப் பேரவையின் இசைக்குழு. |
| 1974-76 | உறுப்பினர், 10, 11ஆந்தர பாடநூல் ஆலோசனைக்குழு, பாடவிதான நிலையம், கல்வி அமைச்சு, கொழும்பு. |
| 1973-77 | சிறுவர், இளைஞர் நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் விருந்துநிலைத் தயாரிப்பாளர் |
| 1978 | உறுப்பினர், நிர்வாகக் குழு, வள ஆய்வு நிறுவனம், நல்லூர். |
| 1981-82 | உறுப்பினர், பண்பாட்டு, கிராமிய அபிவிருத்திக் குழு, மாவட்ட அபிவிருத்திப் பேரவை, யாழ்ப்பாணம். |
| 1985 | உறுப்பினர், பண்பாட்டுப் பேரவை, மாவட்ட அபிவிருத்திப் பேரவை, யாழ்ப்பாபணம். |
| 1993-2004 | தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம். |
| 1993-2007 | தலைவர், யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகம். |
| 1995-2006 | தலைவர், வட இலங்கை ஆயள்வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| 2005 | தலைவர், யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம். |

# வைத்திய கலாநிதி
# சேனாதிராசா ஆனந்தராசா அவர்கள்
## (ஆலோசக மருத்துவ நிபுணர்)



கோப்பாய் நாகலிங்கம் சேனாதிராசா தெல்லிப்பழை கிழக்கு இரத்தினம் தம்பதியினருக்கு மகனாக ஆனந்தராசா பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கொட்டாஞ்சேனை மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை கொழும்பு உவெஸ்லிக் கல்லூரியிலும் கற்று மருத்துவக் கல்விக்குத் தெரிவாகி கொழும்பு மருத்துவக் கல்லூரியில் மருத்துவப்படிப்பை மேற்கொண்டார். மருத்துவக்கல்லூரியில் M.B.B.S கற்கைநெறியைப் பூர்த்தி செய்து பட்டப்பின் படிப்பில் M.D தகமையையும் பெற்றார். மேலும் பொதுவைத்தியத்தில் M.R.C.P (UK), F.R.C.P (UK) பட்டம் பெற்று கொழும்பு பட்டப்பின்படிப்பு மருத்துவ நிலையத்தில் D.C.H பட்டத்தையும் பெற்று ஆலோசக மருத்துவ நிபுணராக வவுனியா ஆதார வைத்திய சாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, யாழ்போதனா வைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் பணியாற்றினார். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்று தற்போது ஆலோசக மருத்துவராக கொழும்பு Central Hospital, Royal Hospital ஆகிய நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றார். மேலும் இவர் அரசசேவையில் கடமையாற்றிய போது யாழ் போதனா வைத்தியசாலை அபிவிருத்திச்சங்க தலைவராகவும், அரச வைத்திய சங்க யாழ்கிளையின் தலைவராகவும், அரச வைத்திய சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் யாழ் மருத்துவ சங்கத்தின் தலைவராகவும் இருந்து இவ் அமைப்புக்களை வழிநடத்தினார். தான் பெற்ற மருத்துவக்கல்வியை மருத்துவ மாணவர்களுக்கு போதிப்பதற்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும், கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும் போதனாசிரியராகவும் கொழும்பு பட்டப்பின் படிப்பு மருத்துவநிலையத்தில் பயிற்றுவிப்பாளராகவும் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், சோதனையாளராகவும் கடமையாற்றினார்.

வைத்திய கலாநிதி ஆனந்தராசா அவர்களின் மருத்துவ சேவையைக் கௌரவித்து யாழ் பல்கலைக்கழகம் "கலாநிதி" எனும் பட்டத்தையும், கம்பன் கழகம் "சான்றோர்விருது" எனும் பட்டத்தையும் வழங்கிக் பெருமைப்படுத்தின. தன்னை நாடிவரும் நோயாளர்களை கரிசனையுடன் அவர்களின் நோய்நாடி நோய்தீர்த்து மருத்துவ சேவையை புனிதமான மக்கள் சேவையாக மதித்துப் பணியாற்றியவரும் வைத்திய கலாநிதி ஆனந்தராசா அவர்களுக்கு அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் விழாவில் "சிவத்தமிழ்விருது" வழங்கிக் கௌரவிப்பதில் ஆனந்தமடைகின்றோம்.

# அளவையூர் கலாபூஷணம்
# நாதஸ்வர வித்துவான் மு.பெ.பாலகிருஷ்ணன்




ஈழநாட்டிலும் வெளிநாடுகளிலும் தனது நாதஸ்வர இசையால் மக்கள் மனதை கொள்ளை கொண்ட நாதஸ்வரக் கலைஞராக நாதஸ்வர வித்துவான் பாலகிருஷ்ணன் விளங்குகின்றார். நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டு 11.01.1938இல் பிறந்தார். இவரது ஆரம்பக் குருநாதராக இவரது தாத்தா முத்துச்சாமியும் தந்தை பெரியசாமியும் விளங்கினார்கள். இதனால்தான் போலும் இவ்விருவது பெர்களின் முதலெழுத்துக்கள் தனது பெயருக்கு முதலெழுத்தாக M.P பாலகிருஷ்ணன் எனக் கொண்டுள்ளார். தனது நாதஸ்வரக் கலையை அளவையூர் நாதஸ்வரக் கலாநிதி N.K பத்மநாதன் அவர்களிடம் 10 வருடங்கள் பயின்றும் அவருடன் இணைந்தும் நாதஸ்வரக் கச்சேரிகளை நிகழ்த்தியுள்ளார். தமிழ்நாடு திருநாவுக்கரசுபிள்ளை அவர்களிடம் கீர்த்தனைகள் கற்றுள்ளார்.

**இவர் பெற்றுள்ள பட்டங்களும் விருதுகளும்**

1. அளவையூர் தவில்மேதை தட்சணாமூர்த்திப்பிள்ளை அவர்களால் "கர்நாடக சங்கீத நாதஸ்வர இசைவேந்தன்" வழங்கப்பட்டது.
2. சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோவில் வழங்கிய "லலிதஸ்வரநாதபூபதி"
3. நல்லூர் ஆதீனம் சோமசுந்தரதேஷிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய "மதுரகானபூஷணம்"
4. இலங்கை அரசாங்கத்தால் 2011ம் வருடம் வழங்கப்பட்ட "கலாபூஷணம் விருது"
5. 2015இல் நல்லூரில் நடைபெற்ற இசைவிழாவில் "அகில உலக நாதஸ்வரச்சக்கரவர்த்தி"
6. 2016 நடைபெற்ற கம்பன் விழாவில் "சுவாமி விபுலானந்தர் விருது"

எமது ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் மகோற்சவகாலத்தில் கொடியேற்றம், தேருற்சவம் ஆகிய விழாக்களில் தவறாது வருகைதந்து நாதஸ்வர இசையர்ச்சனை செய்தும் வழக்கத்தைக் கொண்டவர் மூத்த நாதஸ்வரக்கலைஞராக நமது மண்ணிற்கு பெருமை தேடிக்கொண்டிருக்கும் M.P பாலகிருஷ்ணன் அவர்களுக்கு அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்தநாள் விழாவில் "சிவத்தமிழ் விருது" வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.



# பொன்னாலை பண்டிதர்
# பொ.தி. பொன்னம்பலவாணர் அவர்கள்

பொன்னாலை தியாகராசா காமாட்சி தம்பதியினருக்கு 16.10.1945இல் பொன்னம்பலவாணர் அவர்கள் பிறந்தார். இவர் தனது கல்வியை பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாலயம், யாழ் வைத்தீசுவரா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்றுக்கொண்டார். தமிழ்மொழிமீதிருந்த ஆர்வம் காரணமாக யாழ் நாவலர் வித்தியாசாலையிலும், யாழ். வைத்தீசுவரா வித்தியாலயத்திலும் பண்டித வகுப்புக்களுக்குத் தோற்றி பண்டிதரானார். நல்லூர் கணபதீஸ்வரர் குருகுலத்தில் சமஸ்கிருத பிரவேச பண்டிதர் வகுப்பில் கற்று சமஸ்கிருதத்தில் தேர்ச்சி பெற்றார். யாழ் இந்துக் கல்லூரியில் வச்சிரவேலு முதலியாரின் சிவஞானபோத சிற்றுரை வகுப்பிலும் கலந்து சிவஞானபோதத்தைக் கற்றுக் கொண்டார்.

யாழ் இந்துக் கல்லூரியில் தற்புருஷதேசிகர் மெய்கண்டராதீன ஞானப்பிரகாச சுவாமிகளின் சிவஞானசித்தியார் வகுப்பிலும், சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட வித்துவான் கார்த்திகேசுவின் சித்தியார் வகுப்பிலும் கலந்து தனது தமிழறிவை மென்மேலும் வளர்த்துக் கொண்டார்.

இவரது ஆசிரியப்பணி நல்லூர் கணபதீஸ்வர குருகுலத்திலும், யாழ் ஆரிய திராவிடபாஷா அபிவிருத்திச் சங்கத்திலும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஈழநாடு, முரசொலி ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும் கடமையாற்றினார். யாழ் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சைக் காரியதரிசியாகவும் கடமையாற்றினார்.

**இவரால் ஆக்கப்பட்ட உரை நூல்கள்**

1. புட்பவிதியுரை
2. காசிகாண்ட வசனம்
3. திருவாதவூரடிகள் புராண சிந்தனம்
4. பிள்ளையார் கதை விளக்கம்
5. பொன்னாலை அனந்தசயனப்பெருமாள் கும்பிஷேகமலர்

சிறந்த உரையாசிரியாக விளங்கும் இவர் தேவார முதலிகள் எனப் போற்றப்படும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் திருப்பதிகங்களுக்குச் சிறந்த விளக்கவுரைகள் எழுதியமை குறிப்பிடத்தக்கவொன்றாகும். மேலும் ஈழநாடு பத்திரிகையில் வெள்ளிச் சிந்தனைக் கட்டுரைகள், நூல் விமர்சனங்கள் மலர்க்கட்டுரைகள் அணிந்துரைகள் என்பனவும் இவரது ஆக்கங்களாகும். சமயச் சொற்பொழிவுகளையும், புராணபடன உரைசொல்வதையும் தனது பணியாக மேற்கொண்டுள்ளார்.

**இவர் பெற்ற கௌரவங்கள்**

1. யாழ் இந்து சமயப் பேரவையினால் - "சிவகலாபூஷணம்" பட்டம்.
2. நல்லை ஆதீனத்தால் - "பௌராணிகவித்தகர்" பட்டம்.
3. சுழிபுரம் நன்னெறிக்கழகத்தால் - "சிந்தாமணி" பட்டம்.
4. யாழ் இந்து சமயப் பேரவையால் - "திருவாசகமணி" பட்டம்.

தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராயும், உரையாசிரியராகவும், விளங்கும் பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்களுக்கு அன்னை சிவத்தமிழ் செல்வியின் பிறந்தநாள் விழாவில் " சிவத்தமிழ்விருது" வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.



# திருமதி மகாதேவி பத்மநாதன் அவர்கள்

## ( ஓய்வுநிலை பயிற்றப்பட்ட ஆசிரியை )

திருமதி மகாதேவி அவர்கள் 1932-04-24 இல் மலேசியாவில் பிறந்தார். பின்னர் இலங்கைக்கு வந்து பள்ளி செல்லும் பராயம் அடைந்ததும் தனது ஆரம்பக் கல்வியை கொல்லங்கலட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், பன்னாலை சேர்.கனகசபை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கற்று இடைநிலைக்கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் கற்றார்.

தனது ஆசிரியப்பணியை தொண்டராசிரியராக இருவருடங்கள் மாவிட்டபுரம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினார். பின்னர் இந்தியா, மதுரையில் சின்னாளம்பட்டி ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சி பெற்றார். பின்னர் காரைநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவி ஆசிரயையாக பணியாற்றி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். தனது ஆசிரியப்பணியை பரந்தன் தமிழ்க்கலவன் பாடசாலை, கிளிநொச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில் பணியாற்றி 60வது வயதில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இவர் யூனியன் கல்லூரியில் 17 வருடங்கள் ஆசிரியப்பணியாற்றிய காலப்பகுதியில் காலை ஒன்றுகூடலில் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம், கட்டுப்பாடு, சமய அனுட்டானங்கள் முதலியவற்றை பேணுவதற்காக பிரதி வெள்ளிதோறும் நற்சிந்தனை வழங்குவார். வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும்போது பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாணவர் ஒழுக்கம், கல்வியின் முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்புக்களைக் கூறி தனது கற்பித்தலை ஆரம்பிப்பார். இவ்வாறாக தனது கல்விப்பணிக்கு அப்பால் மாணவர்கள் சமயநெறி, ஒழுக்கம் ஆகியவற்றில் மிகுந்த அக்கறை காட்டிய ஆசிரியையாக விளங்கினார். பாடசாலையிலும் ஏனைய சமய நிறுவனங்களிலும் நடாத்தப்படும் பண்ணிசை, விவாதம், பேச்சு ஆகிய போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் பெரும் பங்காற்றினார். யூனியன் கல்லூரியில் 1980களின் நடுப்பகுதியில் புவனேஸ்வரி ஆலயத்தை ஸ்தாபிப்பதில் ஆசிரியரின் பங்கு மிகவும் காத்திரமானதொன்று.

தான் கற்பித்த பாடசாலையில் மட்டுமன்றி ஏனைய பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் சமயகுரவர்களினது குருபூசைகள், நவராத்திரி விழாக்கள் முதலானவற்றில் ஆசிரியர் பிரசங்கம் செய்து சமயப்பிரசாரகராக விளங்கினார். சிவத்தமிழச்செல்வி அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் யூனியன் கல்லூரியில் 1975ல் தனது ஆசிரியப்பணியை நிறைவுசெய்தபோது 1975இல் அக்கல்லூரியில் இணைந்த திருமதி பத்மநாதன் அன்னை அவர்களின் அசிரியத்துவப்பணி என்ற அஞ்சலோட்டத்தின் தொடர்ச்சியை தொடர்ந்தவர் என்றும் யூனியன் கல்லுரியில் சைவமும் தமிழும் என்ற மரபின் அச்சாணியாக அவர் தனது சேவைக்காலத்தில் கடமையாற்றினாரென்றும் ஆசிரியையின் பழைய மாணவரும் கல்லூரியின் உப அதிபருமான திரு. வேலும்மயிலும் அவர்கள் விதந்துரைத்துள்ளார். இந்த வகையில் தனது கல்விப்பணியாலும், சமயப்பணியாலும் பெருமைபெற்ற திருமதி மகாதேவி பத்மநாதன் அவர்களுக்கு அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் விழாவில் "சிவத்தமிழ் விருது" வழங்கி கௌரவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

# சிவத்தமிழ்ச்செல்வி அறக்கொடை வழங்கல் - 2017



## அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

- **யாழ். போதனா வைத்தியசாலை பெண்கள் வைத்தியப் பிரிவு**

  **பெறுபவர் : வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி அவர்கள்**

  ( பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை )

- **தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை**

  **பெறுபவர் : வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகர் அவர்கள்**

  ( பணிப்பாளர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை )

- **சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்**

  ( தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் 2017இல் கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவையும் கருத்திற்கொண்டு, நூறு மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல் )

  **பெறுபவர் : உயர்திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் அவர்கள்**

  ( கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம் )

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

*தலைவர்*

**திரு. நா. தவநாதன்**

**திரு. மு. அருளையா**

*( இணைச் செயலாளர் கள்)*

**திரு. அ. சண்முகநாதன்**

*பொருளாளர்*

**திரு. சு. ஏழூர்நாயகம்**

*உப பொருளாளர்*

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை,**

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*

*தெல்லிப்பழை.*

*07-01-2017*

# தென்திசை வாயில் கோபுரம் அடிக்கல் நாட்டு வைபவம்
# தைப்பூச நன்னாள் - 2016









துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வான்நிலைத் தோற்றம்

Print Master. T.P. 021-205 3322